# தானே அவன்!



சி. இராமநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# தானே அவன்

# INDWELLER

திருமந்திரக் கடல்
சி. இராமநாதன்

வெளியீடு ;
**தமிழ்மணி புத்தகப் பண்ணை**
281, திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை, சென்னை-600005.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரிமை : ஆசிரியருக்கு
முதற் பதிப்பு : 1[illegible]9

தயாரிப்பு ; சத்தியமூர்த்தி

விலை : ரூ. 10-00

அச்சிட்டோர் :
சேதுமதி அச்சகம்
12, சாயி நகர் இணைப்பு,
சென்னை-600 111.
தொலை பேசி : 423375

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகவுரை

கிழக்கு நாடுகளுக்கு வியாசர் எழுதிய நான்கு வேதங்களே முதல் ஆதி நூலாகக் காணப்படுகிறது அதன் பின்னர் ஞானத்தில் திளைத்த ரிஷிகளும், சற்குருக்களும் தங்கள் சீடர்கள் மூலமாக கொடுத்த உபதேசங்கள் மலிந்து கிடக்கின்றன. அதேபோலப் பழைமை வாய்ந்த தமிழ் மொழிக்கு திருமந்திரமும் ஒரு முதல் நூலாகக் காணப்படுகிறது. நாயன்மார்கள், சித்தர்கள் போன்றவர்களின் கருத்துக்களும் உண்மைகளும் திருமந்திரத்தின் கருத்தோடு ஒத்து நிற்கின்றன.

ஆகையினாலே 3000 திருமந்திரங்களுள் மிகவும் பிரதானமான, சுத்தமான பாடல்களைத் தெரிந்தெடுத்து மிகக் குறுகிய தத்துவ அர்த்தங்களைக் கொடுத்து தமிழ் மொழி கற்ற எல்லோரும் எளிதில் உணரக் கூடிய வகையில் எனது குருநாதர் இந்நூலுக்கும் விளக்கம் அளித்துள்ளார்.

எவர்க்கும் மூலப் பொருளாய் நிற்பவன் தானே அவனாகி நிற்பவன் (Indweller), மூலாதாரத்திலிருந்து தாமரை மொட்டுப்போல் ஏழு ஆதாரங்களைப் பற்றி மேலெழுந்து கீழிறங்கவும் (Sublevel) வல்லவன், அவனைத் திருமூலர் தனது சத்குருவாகிய நந்தியின் அருளினால் அறிந்து தான் பெற்ற எல்லா இன்பங்களையும் உலகோர் அறியும் வண்ணம் அர்ப்பணிப்பதாகப் பின்வரும் பாடலில் கூறுகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மூலன் உரைசெய்த மூவாயிரம் தமிழ்
ஞாலம் அறியவே நந்தி அருளது
காலையில் எழுந்து கருத்தறிந்து ஓதிடில்
ஞாலத் தலைவனை நண்ணுவரன்றே"

மக்கள் காலையில் எழுந்து திருமந்திரங்கள் சிலவற்றைக் கருத்தறிந்து பாடினால் தானே அவனாகி நிற்கும் இறைவனை அடையாளம் என்கிறார்.

சிறந்த தத்துவ விளக்கங்களெல்லாம் அடங்கியிருக்கும் இத்திருமந்திரத்தின் புராதன ஞான அறிவு உலகெல்லாம் பரவி, அது கூறும் உண்மைகளை நாம் அறிந்துணர்ந்து இன்பமாக வாழ்வோமாக.

எனது குருநாதரின் வேண்டுகோளின்படி இந்நூலை மிகச் சிறப்பாக அச்சடித்து அழகாக வெளியிட ஆர்வத்தோடு முன்வந்த சேதுமதி அச்சகத்தினருக்கும், இந்நூலை வெளியிட உதவி புரிந்த ஏனையோருக்கும் அன்பு கலந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்ஙனம்,

**சத்தியன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தானே அவன்.

பொன்னாற் புரிந்திட்ட பொற்கடையென்னப்
பின்னாற் பிறங்க இருந்தவன் பேர் நந்தி
என்னாற் தொழப்படும் எம் இறை மற்றவன்
தன்னாற் தொழப்படுவாரில்லைத் தானே.

(திருமந்திரம்-9)

ஒளிமயமான ஐந்தெழுத்துச் சக்கரத்தால் பொற்கடை போல் எங்கும் உருவங்கள், தோற்றங்கள், வடிவங்களாய் உலகம் முழுதும் வியாபித்து நிற்கும் காட்சிகளுக்குக் காரணமாய் நிற்பவன் நந்தியென்னும் பெயரை உடையவன், குரு சீடன் மரபின்படி திருமூலர் தனக்குள் ஐந்தெழுத்து சக்கரத்தில் இயங்கும் ஆத்மாவுக்கு நந்தியென்னும் பெயரைச் சூட்டியுள்ளார். தானாய் நிற்கும் வஸ்துவையே என்னாற் தொழப்படும் இறைவனென்று கூறுகின்றார். மற்ற மனிதர்கள் தமக்குள் இயங்கும் வஸ்துவால், பிராணாயாமமத்தால் தொழுவாரில்லை, எமது உடம்புள் ஐந்தெழுத்தில் இயங்கும் அப்பொருளே எம்மையும் மற்றும் சராசரங்களையும் படைத்து காத்து அழித்து நிற்கின்றது.

சத்தியன் தருத்து :- நன்கு அறிந்த அறிவாளிகட்கு இறைவன் அவர்கள் உடம்பினுள்ளேயே இருந்து இயக்குகின்றான் Know your self என்ற கருத்து வலியுறுத்தப் படுகிறது.

தானே இருநிலம் தாங்கி விண்ணாய் நிற்கும்
தானே சுடும் அங்கி ஞாயிறு திங்களும்
தானே மழை பொழி தையலுமாய் நிற்கும்
தானே தடவரை தண்கடல் ஆகுமே

(திருமந்திரம்-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தானென நிற்கும் ஐந்தெழுத்துச் சக்கரமே தூலநில மாகிய இவ்வுலகத்தையும், சூக்கும நிலமாகிய வானுலகத் தையும் தாங்கி விண்ணாய் நிற்தும் பொருள். மண்ணுல கத்தைப் பாரென்றும் சூக்கும உலகத்தை விசும்பென்றும் கூறலாம். தாளே உடம்புள் நிற்கும் ஆத்ம சூடராகவும், வானுலகத்தில் சந்திரனாகவும் விண்ணுலகத்தில் ஆதித் தனாகவும் நிற்கும். தானே மழையைப் பெய்விக்கும் சக்தியாகவும் தானே தண்கடல் மலை முதலியனவாகவும் நிற்கும்.

சத்தியன் கருத்து :- உமாபதி சிவாச்சாரின் திருவருட் பயன் கூறுவது நோக்கற்பாலது.

"அகரவுயிர் போல் அறிவாகி எல்லாம்
நிகரிலிறை நிற்கும்நிறைந்து"
"எங்கு மெவையு மெரியுறு நீர் போலேகந்
தங்குமவன் தானே தனி"

தொடர்ந்து நின்றானைத் தொழுமின் தொழுதால்
படர்ந்து நின்றான் பரிபாரகம் முற்றும்
கடந்து நின்றான் கமலம் மலர்மேல்
உடந்து இருந்தான் அடி புண்ணியமாமே
(திருமந்திரம்-26)

எல்லாப் பிறப்புக்களிலும் தொடர்ந்து நிற்பவன் எமக்குள் இயங்கும் ஆத்மா, அவனைத் தொழுமின் தொழு தால் அவனே உலகம் முழுவதிலும் பலபல தோற்றங் களாய்ப் படர்ந்து நிற்பதை உணரலாம். அவன் கருவில் மிதித்த கமலத்தில் இருந்து கொண்டு மண்ணுலகைக் கடந்து நிற்கின்றான். அவனுடைய அடியாகிய ஐந் தெழுத்தின் முதலெழுத்தான அகார எழுத்தே இறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வனின் திருவடி. அவன் அன்போடு உயிரைக் காதலித்து நிற்பதால் அவனின் அடியைப் பற்றினால் மெய்ப் பொருளை உணரும் வழியில் செல்லலாம்.

சத்தியன் கருத்து :- சுவாமி விபுலானந்தரின் கருத்தும் இதுவாகும்.

வெள்ளை நிற மல்லிகையோ வேறெந்த மாமலரோ
வள்ளல் அடியிணைக்கு வாய்த்த மலரெதுவோ
வெள்ளை நிறப்பூவுமல்ல வேறெந்த மலருமல்ல
உள்ளக் கமலம் அடி உத்தமனார் வேண்டுவது.

பிதற்றுகின்றேன் என்னும் பேர் நந்திதன்னை
இயற்றுவன் நெஞ்சத்துள் இரவும் பகலும்
உயற்றுவன் ஓங்கொளி பண்ணன் எம்மானை
இயற்றிகழ் சோதி இறைவனுமாமே.

(திருமந்திரம்-94)

நந்தி என்று பேர் வைத்த ஐந்தெழுத்தை எப்போதும் ஓதுகின்றேன். ஐந்தெழுத்தின் முதலெழுத்தாகிய அகாரத்திலிருந்து என் நெஞ்சுக்குள் இரவும் பகலுமாய் உகாரத்திற்கும், உகாரத்திலிருந்து அகாரத்திற்கும் பிராண வாயுவை இயற்றுவன். சித்தாகாசத்தில் ஓங்கும் ஒளி வண்ணனாகிய பெருமானை உயற்றுவன். அப்படி இயற்றி வெளிப்பட்ட சோதியே அருட்பெருஞ்சோதியான இறைவன்.

சத்தியன் கருத்து :- இராமலிங்க வள்ளலாரும் "அருட்பெருஞ்சோதி தனிப் பெருங்கருணை" என்று அனுபவத்தில் கூறியுள்ளது கவனிக்கற்பாலது. அதாவது இயக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானது எளிமை இசை இயக்கமாக (Simple harmonic motion) ஆக உள்ளது.

ஆதிப்பிரானும் மணிமணி வண்ணனும்
ஆதிக்கமலத்தலர்மிசை ஆயனும்
சோதிக்கில் மூன்றும் தொடர்ச்சியில் ஒன்றானார்
பேதித்து உலகம் பிணங்குகின்றாரே.

(திருமந்திரம்-104)

"நாத விந்து கலாதீ நமோ நமோ"—என அருணகிரிநாதர் திருப்புகழில் கூறியுள்ளது போல் விந்து நாதக் கலையால் விளைந்த சக்கரத்தில் ஐந்தெழுத்தில் இயங்கும் பொருளே ஆதிப்பிரான். ஆத்மாவிற்பார்க்க மேலான பொருள் இல்லையென்று. உபநிடதங்கள் கூறும் "தத்துவம் அஸி அகப் பிரம்மம் அஸ்மி" என்பன ஒரு பொருளையே குறிக்கின்றன. சீவனே சிவனென்று திருமந்திரம் கூறுகின்றது. ஆதிப் பிரானும், பிரம்மாவும், விஷ்ணுவும் தொடர்ச்சியாக விளங்கும் ஒரே பொருள், உலக மக்கள் வெவ்வேறாகக் கருதி வாதிக்கின்றார்கள்.

இருந்தார் சிவமாகி எங்கும்தாமாகி
இருந்தார் சிவன்செயல் யாவையும் நோக்கி
இருந்தார் முக்காலத்து இயல்பைக் குறித்து அங்கு
இருந்தார் இழவு வந்து எய்திய சோம்பே.

(திருமந்திரம்-127)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐந்தெழுத்தில் இருந்து சிவமாகி எங்கும் தானாய் நிற்கும் தனிப் பொருளாய், தன் செயலெல்லாம் சிவன் செயலாய்க் கருதி, சென்ற காலம், நிகழ்காலம், வருங் காலமாகிய மூன்று காலங்களின் இயல்பை அறிந்து சமாதி நிலையில் சாதகன் இருப்பார்.

சத்தியன் கருத்து :- தாயுமானவரும் "உன்செயலேயன்றி என் செயல் யாதொன்றில்லை" எனவும் பகவத் கீதையில் கண்ணனும் "முயற்சி செய் பலனை எதிர்பாராதே" எல்லாவற்றையும் இறைவன் பாதத்தில் சரணாகதி யடைந்து விட்டால் இறைவனைக் காணலாம் என் கிறார்கள்.

தூங்கிக் கண்டார் சிவலோகமும் தம்முள்ளே
தூங்கிக் கண்டார் சிவயோகமும் தம்முள்ளே
தூங்கிக் கண்டார் சிவபோகமும் தம்முள்ளே
தூங்கிக் கண்டார் நிலை சொல்வது எவ்வாறே.

(திருமந்திரம்-129)

ஐந்தெழுத்துச் சக்கரத்துள் அகாரம் உகாரம் மகார மாகிய முப்பதத்தை ஓதி தவம் செய்து சிவலோகம், சிவ யோகம், சிவபோகம் மூன்றையும் தனக்குள்ளேயே கண் டார். அவர் தவம் செய்து அடைந்த நிலையை மற்றவர் களுக்கு அறிந்து சொல்ல முடியாது.

சத்தியன் கருத்து :- இறைவனை அடைய ஒவ்வொருவரும் தானே அவனை அடைய முயற்சிக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்தம் முதல் ஐந்தும் தன் வழி தான் சாரில்
சித்துக்கு சித்தன்றி சேர்விடம் வேறுண்டோ
சுத்த வெளியிற் சுடரிற் சுடர் சேரும்
சுத்த மிது குறித்து ஆண்டுகொளே.

(திருமந்திரம்-135)

ஆத்ம சக்கரத்தில் ஓடும் ஐந்தெழுத்துக்கும் ஒலிக்கும் ஓமெனும் சத்தம் அது இயற்கையாய் போகும். தன் வழியைத்தான் சார்ந்து போனால் அறிவுப் பொருளாகிய அப்பொருள் அறிவுப் பொருளையே சேராமல் வேறு இடத்திற்குப் போக மாட்டாது. சுத்த வெளியான சித்தாகாசத்தில் அறிவுப் பொருளாகிய ஆத்மசோதி பரஞ்சோதியோடு சேரும் இது சத்தியம் இதைக் கவனித்து உன் வாழ்க்கையைச் சீரான முறையில் அமைத்து சீவியம் செய் சத்தியன் கருத்து :- திருவருட் பயனில் உமாபதி சிவமும் இதே கருத்தைக் கூறுகின்றார்.

"சத்தசத்தைச் சாரா தசத்தறியா தங்கணிவை
உய்த்தல் 'சதசத்தா முயிர்'

சத்தியன் கருத்து :- சங்கீதத்திலும் அகரம், இகராம், உகாரம், எகாரம், ஓம்காரம் என்னும் உயிரெழுத்துக்களைக் கொண்டு அப்பியாசம் செய்யும் முறை உண்டு. அகார ஸாதகம்தான் குரலுக்கு அழுத்தமும், வலுவும். தெளிவும், குழைவும், பண்பும் ஏற்படும். எனவே அடிப்படை நாதத்திற்கும் அகாரமாகிய மூலாதாரம்தான் துணை. ஸ,ப,ஸ். இதிலும் சட்ஜம் மேலேயும் கீழேயும் ஏறி இறங்கும். பஞ்சமம் ஒருபோதுமே மாறாது. சங்கீதத்தில் கூட எமது முன்னோர் இறைவனை உணர்ந்து கண்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பினிற் கூர்மை ஆதித்தன் வெம்மையால்
உப்பு எனப் பேர்பெற்று உருச்செய்த அவ்வுரு
அப்பினில் கூடிய ஒன்றாக மாறுபோல்
செப்பினிற் சீவன் சிவத்துள் அடங்குமே.

(திருமந்திரம்-136)

சூரியனின் கடுமையான வெப்பத்தால் கடல் நீர்வற்றி உப்பாக உருவம் பெற்று அந்த உருவம் நீரோடு கூடிய ஒரு பொருளாய், நீரைச் சேர்க்கும்போது மாறுவதுபோல் சொல்லில் உருவெடுத்த சீவனும் சிவத்துள் அடங்கி நிற்கும் ஒரு பொருளாய் மாறும்.

சத்தியன் கருத்து;- மெய் கண்ட சாஸ்திரம் பதின்நான்கில் உமாபதி சிவத்தின் திருவருட் பயன் மிக்க நன்று. அவரும் இதே கருத்தை பின்வரும் பாடலில் கூறுகின்றார்.

"தாடலை போல் கூடியவை தானிகழா வேற்றின்பக்
கூடலை நீ ஏகமெனக்கொள்.

தாள்—தலை என்ற சொற்கள் கூடும்போது தாடலை எனற புதுச்சொல் உருவாவதுபோல் சீவனும் சிவமும் கூடி நிற்கும் என்கிறார்.

அடங்கு பேரண்டத்து அணு அண்டம் சென்றங்கு
இடங்கொண்ட தில்லை இதுவன்றி வேறுண்டோ
கடந்தொறு நின்ற உயிர்க்கரை காணில்
திடம்பெற நின்றான் திருவடிதானே.

(திருமந்திம்-137)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்தாகாச வெளியை, சித்தம்பலம், பொன்னம்பலம் பேரம்பலமென பலவாறாக ஞானிகள் கூறுவர். அம்பல மாவது அகில சராசரம் அம்பலமாவது. அஞ்செழுத் தாமே என்று திருமந்திரம் கூறுகின்றது. நாத விந்து படைத்த அணு போன்ற ஐந்தெழுத்து சக்கரம் ஞாலம் முழுவதையும் அடக்கியுள்ளது. ஐந்தெழுத்து அணு அண் டத்துக்குள் நிலையாக நிற்கும் இடம் அகார எழுத்து அமைந்திருக்கும் பீடம். அந்த இடம் தில்லை என்று கூறப்பட்டிருக்கின்றது. மண்ணுலகத்தை கடந்து நிற்கும் உயிரின் ஆதிவீடு நிலையாய் இருக்கும் இறைவனின் திரு வடியான அகார எழுத்து. அதுவே கருவில் மிதித்த கமலப் பாதம். விந்துவின் இருப்பிடம்.

திருவடியே சிவமாவது தேரிற்
திருவடியே சிவயோகங் சிந்திக்கிற்
திருவடியே செல்கதியது செப்பிற்
திருவடியே தஞ்சம் உட்தெளிவார்க்கே.

(திருமந்திரம்-138)

ஆத்மா இயங்கும் ஐந்தெழுத்தின் முதல் எழுத்தே திருவடி அத் திருவடியே ஆத்மாவை சிவமாக்கும் அதுவே சிவயோகத்தை சிந்திப்பவர்களுக்கு அளிப்பது. அதுவே ஆத்மா அடைய வேண்டிய இடத்திற்கு செல்ல நெறியாய் நிற்பது. திருவடியை சற்குரு மூலம் அறிந்து உணர்ந்து தெளிந்தால் மானிடருக்கு இவ்வுலக வாழ்க் கைக்கும் மறுமைக்கும் தஞ்சமாய் நிற்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தானே புலன் ஐந்தும் தன்வசம ஆயிடும்
தானே புலன் ஐந்தும் தன்வசம் போயிடும்
தானே புலன் ஐந்தும் தன்னில் மடைமாறும்
தானே தனித்து எம்பிரான் தனைச் சந்தித்தே.

(திருமந்திரம்-140)

மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐம்புலன்களும் உடல் உணர்ச்சியை நல்கிடும். அப்புலன்கள் தாமென நிறகும் ஆத்மா வசம் ஆகி அதன்வசமேபோகும் அப்புலன் ஐந்தும் ஐந்தெழுத்தில் இயங்கும். ஆத்மாவோடு சேர்ந்து அவையின் குணங்கள் மாறும். ஆத்மா ஐம்புலன்களால் பங்கப்படாமல், உடல் உணர்ச்சியில்லாமல், தானே தனித்து நின்று தத்துவப் பொருளாய் நிற்கும்.

தாம் அறிவார் அண்ணல் தான் பணிவாரவர்
தாம் அறிவார் அறந்தாங்கி நின்றாரவர்
தாம் அறிவார் சில தத்துவ ஞானிகள்
தாம் அறிவார்க்குத் தமர் பரனாமே.

(திருமந்திரம்-251)

கருவில் மிதித்த கமலப் பாதமான இறைவனின் திருவடிக்கு பணிந்தவர் தமக்குள் இயங்கும் ஆத்மாவை அறிவார். திருப்பாதத்தை நினைந்து தியானம் செய்பவர்கள் ஆத்மாவை உணர்வார்கள். மெய்ப்பொருளை உணர்ந்த ஞானிகள் தமக்குள் இயங்கும் ஆத்மாவை அறிவார்கள். ஆத்மாவை உணர்ந்தவர்களுக்கு தமது ஆத்மா இறைவனாய் விளங்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தானொரு காலம் சுயம்புவென்று ஏத்தினும்
வானொரு காலம் வழித்துணையாய் நிற்கும்
தேனொரு பாற்றிகழ் கொன்றை அணிசிவன்
தானொரு வண்ணம் என் அன்பில் நின்றானே.

(திருமந்திரம்-275)

ஐந்தெழுத்துச் சக்கரத்தில் தானென நிற்கும் ஆத்ம வஸ்து ஒரு காலம் உடல் உணர்வு நீங்கி சுயம்புவாய் நிற்பதைப் போற்றினாலும் வானுலகமாகிய சித்தாகாசம் வழித் துணையாய் நிற்கும் தேன் பொருந்திய கொன்றை மலர் போன்ற ஒளியை அணிந்திருக்கும் சிவன் தான் பல வண்ணங்களாய் தோற்றுவான். சீவனாய் நிற்கும் பொருளே சிவனெனப்படுமென்று பல திருமந்திரங்கள் கூறுகின்றது.

நிற்கின்றபோதே நிலையுடையான் கழல்
கற்கின்ற செய்மின் கழிந்தறும் பாவங்கள்
சொற் குன்றலின்றித் தொழமின் தொழுதால்
மற்றொன்றில்லாத மணிவிளக்காமே.

(திருமந்திரம்-292)

ஆத்மா இவ் உடலில் நின்று நாம் சீவிக்கும் பொழுதே அழியாத நிரந்தரமான ஆத்மாவின் கமலப் பாதமாகிய அகார எழுத்தைக் கல்லுங்கள். அகாரம் உகாரத்திற்கு எழுந்து ஓங்காரமாய் விரியும். அது வானுலகம் சென்று மெய்ப் பொருளை உணர்த்தும். பாவங்கள் அழிந்து விடும். ஓமெனும் சொல்லை குறைய விடாமல் ஓதி தொழுங்கள். மணி சோதியே மற்றொன்றில்லாத பரஞ் சோதியாய் நிற்கும்.

வல்லார்கள் என்றும் வழி ஒன்றி வாழ்கின்றார்
அல்லாதவர்கள் அறிவு பல என்பார்
எல்லா இடத்தும் உளன் எங்கள் தம் இறை
கல்லாதவர்கள் கலப்பறியார்களே.(திருமந்திரம்-311)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தி வல்லமையுள்ளவர்கள் தங்கள் ஆத்மா இயங்கும் வழியோடு ஒன்றி உலக வாழ்க்கையை நடாத்துகிறார்கள். இதை பிராணாயாமம் என்று கூறுவர். புத்தியில்லாத வர்கள் மெய்ப் பொருளை உணரும் அறிவு பலவகை யென்று சொல்லி வாது செய்து அழிவர். இறைவன் எல்லாத் தோற்றங்களிலும், உடம்புகளிலும் இருக் கின்றார். கல்லாத மூடர் இறைவன் எமது உடம் புள்ளும் மறற எல்லா உருவங்களிலும் கலந்து இருப்பதை அறியார்கள்,

ஆமே உலகுற நின்ற எம் அண்ணலும்
தாமே ஏழுலகிற் தழற் பிழம்பாய் நிற்கும்
வானேழுலகுறு மாமணிக் கண்டனை
நாலே அறித்தேன் அவன் ஆண்மையினாலே

(திருமந்திரம்-373)

உலக முழுவதிலும் பலபல வடிவங்களாய் தோற்றங் களாய் பொருந்தி நிற்கும் எம்மை அண்டி நிற்கும் இறைவன் ஏழுலகத்திலும் ஒளிப் பிளம்பாய் நிற்கும் வானுலகத்தில் ஏழுலகங்களாகிய மூலாதாரம் சிவந்தித் தானம், மணிப்புரம், அநாகதம், விசுத்தி, ஆஞ்ஞை, சகஸ்நராம் ஆகியவற்றில் சகஸ்ராரத்தில் சோதி மயமாய் நிற்பவனை அவனின் அருளாலேயே நான் அறிந்தேன்.

சத்தியன் கருத்து: மாணிக்கவாசகரின் சிவபுராண மும் இதனையே "அவனருளாலே அவன் தாள் வணங்கி" என்று குறிப்பிடுகின்றார்.

ஒருவனுமே உலகேழும் படைத்தான்,
ஒருவனுமே உலகேழும் அளந்தான்
ஒருவனுமே உலகேழும் கடந்தான்
ஒருவனுமே உடலோடு உயிர்தானே

(திருமந்திரம்-404)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆத்ம சக்கரத்தில் முதலெழுத்தாய் நிற்கும் அகார எழுத்தில் இயங்கும் ஒருவனே ஏழு உலகங்களையும் படைத்து, அளந்து கடந்து நிற்பவன் அவனே உடல் உயிராய் நிற்பவன்.

சத்தியன் கருத்து - திருநாவுக்கரசரும் தனது பாடல் ஒன்றில் பின் வருமாறு குறிப்பிடுகிறார்.

"நீருமாய்த் தீயுமாகி நிலனுமாய் விசும்புமாகி
ஏருடைக் கதிர்களாகி யிமையவர் இறைஞ்ச நின்று
ஆய்வதற்கரியராகி யங்கங்கே யாடுகின்ற
தேவர்க்குத் தேவராவார் திருப்புகலூரனாரே."

தானே திசையொரு தேவருமாய் நிற்கும்
தானே உடல் உயிர்த் தத்துவமாய் நிற்கும்
தானே கடல் மலை ஆதியுமாய் நிற்கும்
தானே உலகிற் தலைவனுமாமே (திருமந்திரம்-412)

ஆத்ம சக்கரத்துள் தானென நிற்கும் பொருளே எட்டுத் திசையாய் தேவராய், உடல் உயிர்த் தத்துவமாய் கடல், மலை, ஆதியுமாய் நிற்கின்றது. தானென நிற்கு அவனே உலகிற் தலைவனாய் நிற்கும் இறைவன்.

அன்பும் அறிவும் அடக்கமுமாய் நிற்கும்
இன்பமும் இன்பக் கலவியுமாய் நிற்கும்
முன்புறு காலமும் ஊழியுமாய் நிற்கும்
அன்புற ஐந்தில் அமர்ந்து நின்றானே
(திருமந்திரம்-4 6)

ஆத்மாவாக உடலுள் இயங்குபவன் அன்பாகவும் அறிவாகவும் அடக்கமாகவும் நிற்கின்றான். அவன் தானே இன்பத்தை அளித்தும் பரஞ்சோதியோடு கலந்து பேரின்பத்தை அளித்தும் முற்பிறப்புக்களின் காலமா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவும் ஊழ்வினைக்குத் தலைவனாகம், ஐந்தெழுத்துச் சசக்ரத்தில் அமர்ந்திருக்கின்றான்,

உள்ளத்து ஒருவனை உள்ளுறு சோதியை
உள்ளம் விட்டு ஓரடி நீங்கா ஒருவனை
உள்ளமும் தானும் உடனே இருக்கினும்
உள்ளம் அவனை உருஅறியாதே.

(திருமந்திரம் - 431)

ஆத்மாவாக உள்ளத்தில் ஒருவனே அவன் ஆத்மசோதியாக துலங்குபனை, உள்ளத்தில் பன்னிரண்டு அங்குல அளவை விட்டு நீங்காதவனை, உள்ளத்தில் இருப்பவனும் தானும் ஒருமித்து இருந்தபோதிலும், உள்ளத்தில் இருப்பவன் தானென நிற்கும் அவன் உருவத்தை அறியாது "கூடமெடுத்து குடிபுக்க மங்கையர்" ஒருவர் மீளுவர். பன்னிரண்டு அங்குலமென்று திருமந்திரம் கூறுவதை கவனிக்கவும்.

மண்ணொன்று தான் பல நற்சுாலமாயிடும்
உள்நின்ற யோனிகளெல்லாம் ஒருவனே
கண்ணொன்று தான் பலகாணும் தனைக்காணா
அண்ணலும் அண்ணலும் அவ்வண்ணம்
ஆகிநின்றானே

(திருமந்திரம்-440)

களிமண்ணிலிருந்து பலபல வித்தியாசமான மட்பாண்டங்கள் உருவாகின்றன. அதுபோல் ஐந்தெழுத்துச் சக்கரவர்த்தியின் முதலெழுத்தான அகார எழுத்தில் இருக்கும் இறைவன ஒருவனே உலகத்தில் பலபல வடிவங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களாய் உருவங்களாய் பிறப்பெடுத்து நிற்கின்றது ஊனக் கண்ணானது எல்லா வெளிப்பொருள்களையும் காணும் சக்தி யிருந்தாலும் தனக்குள் இயங்கும் ஆத்மாவைக் காணமாட்டாதிருப்பதைப்போல் இறைவனையும் காண இயலாத வண்ணமாக இருக்கின்றது.

உச்சியில் ஓங்கி ஒளிதிகழ் நாதத்தை
நச்சியே இன்பம் கொள்வார்க்கு நமனில்லை
விச்சும விரிச்சுடர் மூன்று உலகுக்கும்
தைச்சுமவனே அமைக்க வல்லானே

(திருமந்திரம்-442)

சித்தாகளசமான பரமவெளி உச்சியில் ஒளியோடு ஒளியோடு திகழும் நாதத்தைப் பற்றிநின்ற இன்பத்தை அனுபவிப்பவர்களுக்கு யமன் இல்லை. அவர்கள் மகா சமாதியடைவர். வீசும் ஆத்மசோதி உள்ளிருந்து விரிந்து மண், வான், விண்ணாகிய மூன்று உலகங்களுக்கும் தலைவனாய் எல்லா வல்லமையும் பெற்று நிற்கும்,

சத்தியன் கருத்து - மாணிக்கவாசகரும் சிவபுராணத்தில் "ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே" என்றும் "ஆதியும், அந்தமும் இல்லா அரும்பெருஞ்சோதி" என்றும் திருவெம்பாவையிலும் குறிப்பிடுகிறார்

ஆதி படைத்தனன் ஐம்பெரும் பூதங்கள்
ஆதி படைத்தனன் ஆயபல ஊழிகள்
ஆதி படைத்தனன் எண்ணிலி தேவரை
ஆதி படைத்தவை தாங்கி நின்றானே.

(திருமந்திரம்-447)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாதவிந்துக்களால் உண்டானா ஐந்தெழுத்துச் சக்கரத்தில் இருப்பவனே ஆதி அவன் ஐம்பூதங்களையும்(நிலம் நீர், தீ, காற்று ஆகாசம் என்பன) அதன்பின் 8,400,000 விதம் விதமான பிறப்புக்களையும், அதன்பின் கணக்கற்ற தேவர் படைத்து தான் படைத்தவற்றைத் தானே தாங்கி நின்றான்.

உள்நின்ற சோதிஉற நின்ற ஓருடல்
விண்நின்ற அமரர் விரும்பும் விழப்பொருள்
மண்நின்ற வானோர் புகழ், திருமேனியன்
கண்நின்ற மாமணிமா போதகமே.

((திருமநதிரம்-449)

உடம்பினுள்ளே நின்ற ஆத்மசோதியோடு பொருந்தி நின்றது ஓருடல், இப்படி பெறுதற்கரிய நிலையை தேவர்கள் விரும்பி நிற்பார்கள். மண்ணுலகத்தில் வாழும் யோகிகள் புகழ்கின்ற ஒளிமயமான மேனியை உடைய்வர்கள். அவன் நெற்றிக் கண்ணில் ஒளிப்பிளம்பாய் நின்று போதத்தை அளிப்பவன்.

ஏற எதிர்க்கில் இறைவன் தானாகும்
மாற எதிர்க்கில் அரியவன் தானாகும்
நேரொக்க வைக்கில் நிகர் போதந் தானாகும்
நேரொந்த மைந்தனும் பேர் அரசாளுமே

(திருமந்திரம்-457)

ஐந்தெழுத்துச் சக்கரத்துள் அகாரத்திலிருந்து உகாரத்திற்கு எழும் பிராணவாயுவை எதிர்க்கில் அகாரத்துள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உகாரம் அடங்கி சமாதிநிலையை அடையும். அதுவே இறைவனின் நிலை அந்நிலையிலிருந்து மாறாமல் இருப்பவன் மிக அரியவனாவான். அகார உகாரமாகிய ஆத்ம தண்டில் மனத்தை நேரோக்க வைத்து பிராணாயாமம் செய்ய போதத்தை அளிக்கும் ஓமென்னும் நாமத்தை ஓதும் இறைவனின் மைந்தனாகிய ஆத்மாவும் சகல வல்லமையும் பெற்று அரசாளும் தானென நிற்கும் ஆத்மாவே இத்தன்மைகளை நல்கும் பொருள்

சத்தியின் கருத்து :- சிவஞானபோதம் அருளிய மெய்கண்டதேவரும் பின்வருமாறு கூறுகிறார்.

அகார உகாரம் அகங்காரம் புத்தி
மகாரமனச்சித்தம் விந்து - பகாதிவற்றை
நாதமூளவடிவனதால்ந் பிரணவமாம்
போதங்கடற்திரையே போன்று

"எண்ணிலவேோங்காரத் தீசர் சதாசிவமாம்
நண்ணியவிந்து வொடுநாதத்துக் - கண்ணில்
பகரயன்மற்றோடு பிரமனதிதெய்வம்
அகர உகர மகரத்தாம்."

ஏனோர் பெருமையனாகினும் எம் இறை
ஊனே சிறுமையில் உட்கலந்து அங்குளன்
வானோர் அறியும் அளவல்லன் மாதேவன்
தானே அறியும் தவத்தின் அளவே.

(திருமந்திரம் -490)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகில் எல்லாவற்றிலும் பெருமை வாய்ந்தவனாக இருந்தாலும் எமது இறைவன் உடம்பினுள்ளே மிக நுண்ணிய பொருளாய் கலந்து நிற்கின்றான். யோகிகள் தவஞ்செய்து வானுலகத்தில் அறிந்த அளவில்லாதவன் சித்துப்பொருளாய் நிற்கும் தானே தவத்தின் அளவை அறியும் உடம்புக்குள் சிறுமையில் உட்கலந்து நிற்பவன் ஐந்தெழுத்தில் இயங்கும் ஆந்மா.

கைவிட்டிலேன் கருவாகிய காலத்தும்
மெய்விட்டிலேன் விகிர்தன் அடிதேடுவன்
பொய்விட்டு நானே புரிசடையான் அடி
நெய் விட்டிலாத இடிஞ்சிலுமாமே.

(திருமந்திரம் - 503)

நான் தவத்தில் பற்றி நிற்கும் ஆத்ம தண்டை. அது வேறு கருவில் சென்று உறைந்த காலத்திலும் கைவிடமாட்டேன். மெய்ப்பொருளான இறைவனின் திருவடியைத் தேடுவன் பொய்யான மாயையை அகற்றி எங்கும் உடைபோல் முளைத்து நிற்கும் எட்டுப் புரியையுடைய சித்துப் பொருளான ஆத்மாவின் அடி நெய் விடாமல் எப்பொழுதும் எரிந்து கொண்டிருக்கும் விளக்கு.

உள்ளத்தினுள்ளே உணரும் ஒருவனை
கள்ளத்தினாலும் கலந்து அறிவாரில்லை
வெள்ளத்தை நாடி விடும் அவர் தீவினை
பள்ளத்தில் இட்டதோர் பத்தல் உள்ளாமே.

(திருமந்திரம் - 511)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளத்தினுள்ளே ஐந்தெழுத்துச் சக்கரத்தில் இயங்கும் ஒருவனை உணராமல் வேறு கள்ள வழிகளால் ஆவது அவனோடு கலந்தறிவாரில்லை உலக பாசத்தால் அவர்கள் செய்த தீவினை அவர்களைப் பாவ வெள்ளத்தில் மூழ்க வைக்கும்.

பிராணன் மனத்தொடும் பேராது அடங்கி
பிராணன் இருக்கிற் பிறப்பு இறப்பு இல்லை
பிராணன் மடைமாறி பேச்சு அறிவித்து
பிராணன் அடைபேறு பெற்றுண்டீரே.

(திருமந்திரம் - 567)

மனத்தைப் பிராணனின் ஓட்டத்தோடு பிரியாது பதித்து அடங்கி நின்றால் அப்பிராணனுக்கு பிறப்பு இறப்பு இல்லை. பிராணன் உடம்புள் நிற்கும் கோலம் மாறி வானுலகம் விண்ணுலகமேறி போதத்தை அளிக்கும். பிராணன் இறுதியில் அடையவேண்டிய பேற்றைப் பெறும்

சமாதி செய்வார்க்குத் தகும் பலயோகம்
சமாதிகள் வேண்டாம் இறையுடன் ஏகிற்
சமாதிதானில்லை தான் அவனாகிற்
சமாதியில் எட்டெட்டுச் சித்தியும் எய்துமே.

(திருமந்திரம் - 631)

ஆதியோடு சமமான நிலையை அடைந்தவர்களுக்கு பல சித்திகள் உண்டாகும் தானென நிற்கும் ஆத்மா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனாகிய இறைவனாக மாறினால் அறுபத்து நான்கு சித்திகளும் கைகூடும்.

சத்தியன் கருத்து :-

ஆயகலைகள் அறுபத்து நான்கினையும்

ஏய உணர்விக்கும் என்னம்மை

தூய உருப்பளிங்கு போல்வாள் உள்ளத்தினுள்ளே

இருப்பள் இங்கு வாராதிடர்

என ஔவையார் கூறுவது நோக்கற்பாலது.

தானே அணுவும் சகத்துந் தன் நேர்மையும்

மானாக் கனமும் பரகாயத் தேகமும்

தானாவதும் பரகாயம் சேர் தன்மையும்

மாறாத உண்மையும் வியாபியுமாமே.

(திருமந்திரம் - 649)

தானென நிற்கும் ஆத்ம வஸ்துவே அணுவில் அணுவான நுண்ணிய பொருளாய் பிரபஞ்சத்தைப் படைத்த தன்மையனாய், எல்லாத் தேகங்களுள் நிற்பவனாயும், நிற்பதும், மற்ற காயங்களோடு சேரும் தன்மையும், நிலையான மெய்ப்பொருளாயும் எங்கும் வியாபித்து சடைத்து நிற்பவனாயும் உளன்.

சித்தம் திரிந்து சிவமயமாகியே

முத்தந் தெரிந்துற்ற மோனார் சிவமுத்தர்

சுத்தம் பெறலாக ஐந்திற் றுடக்கற்றோர்

சித்தம் பரத்திற் திருநடத்தோரே.

(திருமந்திரம் - 652)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐந்தெழுத்து ஓதஓத சித்தத்தில் ஓடுவதும் மீளுவது மாய் திரிந்து சிவயயமாகி எல்லாம் அறிந்த மௌன சித்த ராய் நிற்பர். சுத்தமான நிலையடைவதற்கு ஐந்தெழுத் தில் இயங்காது புனிதமாய் நிற்பவர் அறிவு வெளியான பரவெளியில் நடம் செய்வார்கள்.

மாலகுவாகிய மாயனைக் கண்டபின்
தான் ஒளியாகித் தழைத்து அங்கு இருந்திடும்
பாலொளியாகிப் படர்ந்து எங்கும் நின்றது
மேலொளியாகிய மெய்ப்பொருள் காணுமே.

(திருமந்திரம் 675)

சித்துப் பொருளான மாயனைக் கண்டபின் தாரினை நிற்கும் ஆத்ம ஒளி தழைத்து ஓங்கி நிற்கும், அதுவே வெண்மையான ஒளியாகி எங்கும் அளவளாவி மேலொளி யாய் நிற்கும் மெய்ப்பொருள்.

சத்தியன் கருத்து :- உமாபதி சிவமும் திருவருட் பயனில் "எங்குமெவையும் எரியுறு நீர்போல் ஏகம் தங்குமன் தானே தனி" என்றும்

திருநாவுக்கரசரும் தனது தேவாரத்தில்
"உடம்பெனு மனையகத்து யுள்ளமே தகளியாக
மடம்படும் உணர் நெய்யட்டி யுயிரெனுந் திரிமயக்கி
இடம்படு ஞானத்தீயால் எரிகொள இருந்து நோக்கில்
கடம்பமர் காளை தாதை கழலடி காணலாமே"
என்றும் குறிப்பிடுகிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் வழியாகத் தழைத்திடும் ஞானமும்
தன் வழி மீதாகத் தழைத்திடும் வையகம்
தன் வழியாகத் தழைத்த பொருளெல்லாம்
தன் வழி தன் அருள் ஆகி நின்றானே.

(திருமந்திரம் - 67 )

ஆத்மா ஓடும் ஐந்தெழுத்து வழியே தன் வழி அவ் வழியாகவே ஞானமும் வையகமும் தழைத்திடும். அவன் வழியாகப் பெருகின பொருளெல்லாம் தன் வழி தன் அருளென நிற்கும்.

ஆகின்ற சந்திரன் தண்ணளியாயவன்
ஆகின்ற சந்திரன் தட்பமுமாயிடும்
ஆகின்ற சந்திரன் தன் கலை கூடிடில்
ஆகின்ற சந்திரன் தான் அவனாகுமே.

(திருமந்திரம் - 685)

ஐந்தெழுத்து மந்திரத்தை ஓதி சித்தாகாசத்தில் வெளிப்பட்ட சந்திரன் குளிர்மையான அருளைச் சொரிபவன். அச்சந்திரன் தட்பமுமாகி தன் பிரதிபலிப்புடன் கூடி நின்றால் அப்படி ஆகின்ற சந்திரனே தானென நிற்கும் அவனாகிய இறைவன்.

தானே படைத்திட வல்லவனாயிடும்
தானே அளித்திட வல்லவனாயிடும்
தானே சங்காரத் தலைவனுமாயிடும்
தானே சிவனென்னும் தன்மயனாகுமே.

(திருமந்திரம் - 686)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐந்தெழுத்துச் அச்சரத்தில் தானென நிற்பவனே எல்லாவற்றையும் படைக்க அளிக்க சங்காரம் செய்ய வல்லமையுள்ளவனாய் நிற்பன், தானே இறைவன் என்று குளிர்ச்சிமயமானவனாய் நிற்பன்

தானே எழுந்த அத் தத்துவ நாயகி
ஊனே வழிசெய்து எம் உள்ளே இருந்திடும்
வானோர் உலகின்ற அம்மை மதித்திட
தேனே பருகி சிவாலயமாகுமே.

(திருமந்திரம் - 719)

தானே அகாரத்திலிருந்து உகாரத்திற்கு எழுந்த தத்துவ நாயகி, உடம்பினுள்ளே வழி செய்து உள்ளே சமாதி நிலையில் இருந்திடும். வானோராகிய யோகிகளுக்கோ வானுலகத்தைப் படைத்த சக்தி மதித்திட அமிர்தமாகிய அத்தேனுண்டாகி, அதைப் பருகி சிவனின் இருப்பிடமாகி துரிய நிலையில் இருந்திடும்.

சத்தியன் கருத்து :- இதனையே மாணிக்கவாசகரும் தனது திருவிசைப்பாவில் பின்வருமாறு கூறுகின்றார்.

"பால் நினைந்தூட்டும் தாயினும்
சாலப்பரிந்து நீ பாவியேனுடைய
ஊனினை உருக்கி உள் ஒளிபெருக்கி
உலப்பிலா ஆனந்தமாய
தேனினைச் சொரிந்து புறம் புறம் திரிந்த
செல்வமே சிவபெருமானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங் கெழுந்த நளுவதினியே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடம்பினை முன்னம் இழுக்கென்றிருந்தேன்
உடம்பினுக்குள்ளே உறுபொருள் கண்டேன்
உடம்புள்ளே உத்தமன் கோயில் கொண்டான் என
உடம்பினுள் நானிருந்து ஓம்புகின்றேனே
(திருமந்திரம் - 725)

அழியும் உடம்பை சடப்பொருளை முன்னம் முத்திக்கு இடையூறாக இருக்குமென் றெண்ணி இருந்தேன். உடம்புக்குள்ளே உறுபொருளான ஆத்மாவைக் கண்டேன். உடம்பையே உத்தமனாகிய அவன் கோயிலாகக் கொண்டான். உடம்பினுள்ளே ஆன்மாவாக இறைவன் நானிருக்கிறேன் என்கிறார் திருமூலர்.

சத்தியன் கருத்து :- இதனையே திருநாவுக்கரசரும் மிகத் தெளிவாகக் கூறுகிறார்.

"காயமே கோயிலாகக் கடிமனம் அடிமையாக
வாய்மையே தூய்மையாக மனமணி இலிங்கமாக
நேயமே நெய்யும் பாலா நிறைய நீர் அமைய அட்டிப்
பூசனை ஈசனார்க்குப் போற்றவிக் காட்டினோமே

உந்திச் சுழியுடன் நேர்பிரானின்
சிந்தித்து எழுப்பிச் சிவமந்திரத்தினால்
முந்தி முகட்டில் நிறுத்திய பானனைச்
சிந்தித்து எழுப்ப சிவன் அவ்னாமே.
(திருமந்திரம் - 732)

உந்திக் கமலத்திலிருந்து உதித்து எழும் நேரான பிராணவாயுவை ஓமென்னும் மகாமந்திரத்தைச் சிந்தித்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓதி மேலெழ வைத்து முந்தி சித்தாகாசத்தை நிறுத்தி வைத்த அமுதத்தை அளிக்கும் சோதியைச் சேர்ந்து, சிந்தித்து எழுப்ப ஆத்மா சிவனாவான்.

ஓவியமான உணர்வை அறிமின்கள்
பாவிகள் இத்தின் பயன் அறிவாரில்லை
தீவினையாம் உடன் மண்டல மூன்றுக்கும்
பூவில் இருந்திடும் புண்ணியத் தண்டே

(திருமந்திரம் - 751)

ஓவியம் வரைவதுபோல் ஆத்மா உடம்புள் ஐந்தெழுத்தில் இயங்கும் உணர்வை அறியுங்கள். கர்மவினையால் பாதிக்கப்பட்ட பாவிகள் இந்த உணர்வால் அடையும் பயன் அறியார்கள். கருவில் மிதித்த கமலப் பாதத்திலிருந்து எழும் அகார, உகாரமான புண்ணிய ஆத்ம தண்டை அறியாதவர்களுக்கு மண்ணுலகம் வானுலகம், விண்ணுலகமாகிய மூன்று மண்டலங்களிலும் நற்பயனளிக்க மாட்டாது.

சத்தியன் கருத்து ;- மாணிக்கவாசகரும் சிவபுராணத்தில் கோகழியாண்ட குருமணிதன் தாள் வாழ்க" என்றும் திருநாவுக்கரசரும் "எல்லா உலகமும் ஆனாய் நீயே ஏகம்பம் ஏவியிருந்தாய் நீயே" என்றும் குறிப்பிடும்போது ஆத்ம தண்டையே "கோகழி" என்றும் ஏகம்பம் என்றும் குறிப்பிடுகிறார்கள்.

தண்டுடன் ஓடித் தலைப்பட்ட யோகிக்கு
மண்டலம் மூன்றும் மகிழ்ந்துடல் ஒத்திடும்
கண்டவர் கண்டனர் காணார் வினைப்பயன்
பிண்டம் பிரியப் பிணங்குகின்றாரே.

(திருமந்திரம் - 752)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐந்தெழுத்து ஆத்ம சக்கரத்தின் நடுத்தண்டான அகார உகாரத்தில் ஓடி உய்த யோகிகளுக்கு மண்ணுலகம், வானுலகம், விண்ணுலகம் ஆகிய மூன்று உலகங்களும் மகிழ்ந்து ஒத்து நிற்கும் அதைக் கண்டனுபவித்தவர்களே அதைக் கண்டனர் அதைக் காணாதவர்கள் உடல் உணர்வைக் கைவிட பின் நிற்பர்.

காணகிலாதார் கழிந்தோடிப் போவார்கள்
காணகிலாதார் நயம் பேசித் திரிவார்கள்
காணகிலாதார் கழிந்த பொருளெல்லாம்
காணகிலாமற் கழிகின்ற வாறே.

(திருமந்திரம் - 761)

பிராணனின் உள் ஓட்ட நெறியைக் காணாதவர்கள் பிறந்த உண்மையை அறியாது அழிந்து போவார்கள். அவர்கள் உலகில் பணம் சம்பாதிப்பதைப் பற்றியே மற்றவர்களுடன் பேசித் திரிவார்கள். இறைவனை சிறிதும் சிந்திக்க மாட்டார்கள் ஐந்தெழுத்தில் ஓடும் பிரணவப் பொருளைக் காணகிலாதார் முத்தி அளிக்கும் மேலான மெய்ப் பொருளைக் காணாமல் கழிய விட்டவர்களாவார்கள்.

கழிகின்ற அப்பொருள் காணகிலாதார்
கழிகின்ற அப்பொருள் காணலுமாகும்
கழிகின்ற உள்ளே கருத்துற நோக்கிற்
கழியாத அப்பொருள் காணலுமாமே.

(திருமந்திரம் - 762)

சுவாசத்தைக் கழிகின்ற அப்பொருளான ஆத்மாவை காணாதவர்கள் ஆர்வமிருந்தால் அப்பொருளை காண

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லாம். கழிகின்ற சுவாசத்துக்குள்ளே காணும் கருத்தோடு நோக்கினால் கழியாமல் உடம்பினுள்ளே நிற்கும் பொருளைக் காணலாம்.

கூறும்பொருளிது அகார உகாரங்கள்
ஏறும் பொருளிது சிந்தையுள் நின்றிட
கூறும் அகாரம் குழல் வழி ஓடிட
மாறும் அமர்ந்திடும் அண்ணலுமாமே.

(திருமந்திரம் - 765)

ஓமென்பது ஐந்தெழுத்தின் முதலெழுத்தான அகார எழுத்திலிருந்து உகாரத்திற்கு எழுகின்ற பொருளாய் உணரப்படும் அப்பொருளைச் சித்தையிற் பதிக்க அது மேலேறும் பொருளாய் நிற்கும் ஓமென்னும் உரையைக் கூறும் அகாரம் சக்தி வழியாக ஐந்தெழுத்தில் ஓடில் அப்பொருள் இறைவனாக மாறி உடம்பினுள்ளே சமாதி நிலையில் அமர்ந்து நிற்கும்.

சத்தியன் கருத்து :- உமாபதி சிவாச்சாரியரும் "சிவப்பிரகாசம்" என்னும் நூலில் எட்டாச் சூத்திரத்தில் வரும் பாடலொன்றும் இதே கருத்தை வலியுறுத்றுகிறது.

"தன்னறி வதனாலேதுந்
தனக்கறிவில்லை யேனுந்
தன்னறிவாக வெல்லாந்
தனித்தனி பயனருந்துந்
தன்னறி வறியுந் தன்மை
தன்னாலே தனை யறிந்தால்
தன்னையுந் தானே காணு நீ
தானது வாகி நின்றே."

அண்ணல் இருப்பிடம் ஆரும் அறிகிலர்
அண்ணல் இருப்பிடம் ஆய்ந்து கொள்வார்களுக்கு
அண்ணல் அழிவின்று உள்ளே அமர்ந்திடும்
அண்ணலைக் காணில் அவன் இவனாகுமே.

(திருமந்திரம் - 746)

அண்ணி நிற்கும் இறைவனின் இறைவனின் இருப்பிடம் யாரும் அறியார்கள். அவனின் இருப்பிடம் ஆய்ந்து அறிந்தவர்கட்கு அவன் சுவாச அழிவின்றி சமாதி நிலையில் அமர்ந்திருப்பான். அவனைக் காணில் அவனே இவனாகிய ஆத்மாவென்றும் உண்மையை உணர்வார்கள்.

அவன் இவனாகும் பரிசறிவாரில்லை
அவன் இவனாகும் பரிசதுகேள் நீ
அவன் இவன் ஓசை ஒளியினுள் ஒன்றிடும்
அவன் இவன் வட்டமதாகி நின்றானே.

(திருமந்திரம் - 767)

அவனாகிய இறைவன் இவனாகிய ஆத்மாவாக மாறும் பரிசு அறிவாரில்லை. அப்பரிசு எப்படி உண்டானது என்பதைக் கேள். இறைவனின் நாதமும் ஆத்மாவின் நாதமும் ஆத்ம சேர்தியுள் ஒன்றிடும் இறைவன் ஆத்மாவின் வட்டத்துள் சக்கரத்துள்ளாகி நிற்பான்.

ஆமே அழிகின்ற வாயுவை நோக்கிடில்
நாமேல் உறைகின்ற நன்மை அளித்திடும்
பூமேல் உறைகின்ற போதகம் வந்திடும்
தாமே உலகிற் தலைவனுமாமே

(திருமந்திரம் - 772)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழிந்துபோகும் பிராணவாயுவை நெறிபட உள்ளே நோக்கில் நாம் மேலுலகேறி சமாதியில் உறைகின்ற நன்மையளிக்கும் கருவில் மிதித்த கமலமலர்மேல் சுவாச மற்று உறைகின்ற தன்மையான ஞானம் வந்திடும். உலகில் தாமாக நிற்கும் ஆத்மாவே தலைவனாய் செயல் படும்.

தலைவனுமாயிடும் தன்வழி ஞானம்
தலைவனுமாயிடும் தன்வழி போக
தலைவனுமாயிடும் தன்வழி உள்ளே
தலைவனுமாயிடும் தன்வழி அஞ்சே

(திருமந்திரம் - 829)

தன்வழியான ஐந்தெழுத்து வழியின் ஞானம் உலகிற் தலைவனாய் விளங்கச் செய்யும் ஐந்தெழுத்து வழியே போய் தன் வழி உள்ளே அமரில், தன் வழியாக நிற்கும் ஐந்தெழுத்தே தலைவனாகி நிற்கும்.

தானே பரஞ்சுடர் தத்துவமாய் நிற்கும்
தானே அகார உகாரமதாய் நிற்கும்
தானே பரஞ்சுடர் தத்துவக் கூத்துக்கு
தானே தனக்கு தராதலந் தானே

(திருமந்திரம் - 889)

ஐந்தெழுத்துச் சக்கரத்தில் தானென நிற்கும் ஆத்மாவே பரஞ்சோதிக்கு மெய்ப்பொருளாய் நிற்கும் தானே ஐந்தெழுத்தின் நடுத்தண்டாகிய அகார உகாரத்தில் நிற்கும். எங்கும் அளவளாவி நிற்கும் பரஞ்சுடருக்கு அதன் தத்துவக் கூத்துக்கு தானே தலமாக நிற்கும். அகார உகாரமே எல்லா வடிவங்களுள்ளும், உருவங்களுள்ளும் கூத்தனாக நடனம் செய்பவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆமே சிவங்கள் அகார உகாரங்கள்
ஆமே பரங்கள் அறியா இடமென்ப
ஆமே திருக்கூத்து அடங்கிய சிற்பரம்
ஆமே சிவகதி ஆனந்தமாமே

(திருமந்திரம் - 891)

அகார உகார எழுத்துக்களில் இயங்கும் பொருளே சிவங்கள், அகாரம் உகாரம் இரண்டும் அறியில் அதுவே இலிங்கம் என்று திருமந்திரம் கூறுகிறது. அவையே பரங்களாய் எல்லா இடங்களிலும் சடைத்து நிற்கின்றது. அறிவு வெளியான பரமவெளியில் அகார உகாரத்தின் திருக்கூத்து அடங்கி நிற்கும். அவை ஆனந்தமான சிவகதி யாய் நிற்கும்.

தானே தனக்குத் தலைவனுமாய் நிற்தும்.
தானே தனக்குத் தன்மனலயாய் நிற்கும்
தானே தனக்குத் தன்மயமாய் நிற்கும்
தானே தனக்குத் தலைவனுமாமே

(திருமந்திரம் - 896)

ஐந்தெழுத்துச் சக்கரத்தில் இயங்கும் தானென நிற்கும் ஆத்மப்பொருளே தனக்கு தலைவனாகவும், தனக்கு மலைபோலவும் தன்மயமாகவும், நிற்கும் அவனே தனக்குத் தலைவனுமாகும. வேறு ஒரு தலைவன் இல்லை என்றறிக.

தலைவனுமாய் நின்ற தற்பரக் கூத்தனை
தலைவனுமாய் நின்ற சந்பாத்திரத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைவனுமாய் நின்ற தாதவிழ் ஞானத்
தலைவனுமாய் நின்ற தாள் இணை தானே

(திருமந்திரம் - 897)

தனது ஆத்மாவே தலைவனாய் நிற்கும் ஆடுகின்ற கூத்தனைப்போல் இருக்கும் அதுவே மெய்ப்பொருள் அதுவே பிறப்பை அறுக்கும் ஞானத் தலைவன், கருவில் மிதித்த கமலப் பாதமே ஆத்மாவுக்கு இணையடியாய் ஐந்தெழுத்தின் முதல் எழுத்தான அகார எழுத்தாய் நின்றதுவே அதன் தலைவன்.

தானே தனக்குத் தகுநட்டம் தானாகும்
தானே அகார உகாரமதாய் நிற்கும்
தானே நீங்காரத் தத்துவக் கூத்துக்கு
தானே உலகிற் தனி நடந்தானே.

(திருமந்திரம் - 901)

தனக்குள் இயங்கும் ஆத்மாவே தனக்குத் தகுந்த நடனத்தை அகார உகாரத்தில் நின்று தானே செய்யும் தானே நாதமாய் எழும் மெஞ்ஞானக் கூத்துக்கு தானே உலகத்தில் ஒரு பொருளாய் நின்று செயல்படும்.


தான் ஒன்றி வாழிடம் தன் எழுத்தே யாகும்
தான் ஒன்றும் அந்நான்கும் தன் பேரெழுத்தாகும்
தான் ஒன்றும் நாற்கோணந் தன் ஐந்தெழுத்தாகும்
தான் ஒன்றிலே ஒன்று அவ் அரன் தானே

(திருமந்திரம் - 9.5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தானென நிற்கும் ஆத்மா ஒன்றி வாழும் இடம் தனது ஐந்தெழுத்துச் சக்கரத்தின் முதலெழுத்தான அகார எழுத்திலாகும் மற்ற சிகாரம், உகாரம், ஒங்காரம், மகாரம் ஆகிய நான்கு எழுத்தும் அதன் பெரிய எழுத்தாகும். ஆத்மா ஓடும் நான்கு கோணமும் ஐந்தெழுத்தாகும். ஆத்மா ஐந்தெழுத்தின் ஓரெழுத்தான அகார எழுத்தில் ஒன்றி நின்றால் அதுவே இறைவனாய் நிற்கும்.

சத்தியன் கருத்து :- இங்கு O அகாரம் ABCD ஆகிய நான்கு முப்பரிமாணங்களிலும் ஆத்மாவானது ககாரம் போல் 360 பாகை சுழன்று வந்து கொண்டிருக்கும். (AOD—105 9 அதாவது எகிப்தில் பிரமிட்கட்டியதும் மம்மியை உள்ளே வைத்த திரிகோண மிதியின் தத்துவம் இதாகும் $CH_4$ மீதேன் வாயுவின் கட்டமைப்பு காபனும் ஐதரசனும் மட்டும் சேர்ந்த அமைப்பு ஒட்சிசன் இங்கு சேரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ஒட்கிசன் ஆத்மாவுடன் சேர்ந்தால் பிராணன் ஆகிவிடும்.




படம் நான்முகி (Pyramid)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தானே அளித்திடும் தையலை நோக்கினால்
தானே அளித்திட்டு மேலுறவைத்திடும்
தானே அளித்த மகாரத்தை ஓதிட
தானே அளித்ததோர் கல்லொளியாமே

(திருமந்திரம் . 937)

அகார எழுத்திலிருந்து உகாரத்திற்கு எழும் சக்தியை நாதத்தில் இருந்து எழும் விந்துவாகிய சக்தியை நோக்கினால் தானென நிற்கும் ஆத்மா அருள்புரிந்து வானுலக விண்ணுலகத்திற்கு ஏற்ற வைத்துவிடும். தானே விளைந்த மகார எழுத்தை ஓதினால் அது அழியாத நிரந்தரமான ஒளியை சித்தாகாசத்தில் காட்டும்.

தானே யெழகுணம் தன் சுடராய் நிற்கும்
தானே யெழகுணம் வேதமுமாய் நிற்கும்
தானே யெழகுணமாவது ஓதிடில்
தானே யெழுந்த மறையவனாமே

(திருமந்திரம் - 939)

தானே எழுந்து ஆத்மசுடராய் சோதியாய் நிற்கும் ஆத்மாவானது வேதப்பொருளாகவும், ஐந்தெழுத்தை ஓதும் குணமுடையதாகவும் அப்பொருளே இறைவனாகவும் திகழும் மறைந்து நிற்கும்.

அஞ்செழுத்தால் ஐந்து பூதம் படைத்தனன்
அஞ்செழுத்தால் பல யோனி படைத்தனன்
அஞ்செழுத்தால் இவ் அகலிடம் தாங்கினன்
அஞ்செழுத்தாலெ அமர்ந்து நின்றானே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(திருமந்திரம்-966)

அகாரத்திலிருந்து விரிந்த ஐந்தெழுத்தினால் ஐம் பூதங்களையும், ஐந்தெழுத்தினால் எண்ணமுடியாத பிறப்புக்களையும், இந்தப் பிரபஞ்சத்தையும் தாங்கி நின்றும் அவனே ஐந்தெழுத்து சக்கரத்தில் அமர்ந்த குண்டலினியாகி சுருண்டும் கிடக்கின்றான்.


அஞ்சுக அஞ்செழுத்து உண்மை அறிந்தபின்
நெஞ்சகத்துள்ளே நிறையும் பராபரம்
வஞ்சகமில்லை மனைக்கும் அழிவில்லை
தஞ்சமிதுவென்று சாற்றுகின்றேனே
(திருமந்திரம் - 980)

அஞ்செழுத்துச் சக்கரத்தில் இயங்குவது ஆத்மா. அதற்கு அஞ்சி அதன் உண்மையை அறிந்தபின் அது இருக்கும் நெஞ்சினுள் எங்கும் வியாபித்துள்ள இறைவன் உறைந்து நிற்பன். அவனை ஒருவரும் வஞ்சிக்கமாட் டார்கள். வாழ்வுக்கும் அழிவில்லை. அஞ்செழுத்தில் இயங்கும் ஆத்மாவே அவ் அறிவை மனிதனுக்குத் தஞ்ச மென்று வற்புறுத்திக் கூறி தன்னை அறியும்படி மாணி டர்க்கு எடுத்துக் கூறுகிறது.

தான் அவனாக அவனே தானாயிட
ஆனவ இரண்டில் அறிவன் சிவமாக
போனவன் அஸ்பிது நாலா மரபுறத்
தானவன் ஆகுமோர் ஆதித்த தேவரே
(திருமந்திரம் - 1011)

தான் இறைவனாகவும். இறைவன் தானாகவும் ஆகின்ற இரண்டில் சிவமாகும் சமாதி நிலையை அறிவன் அகாரத்திலிருந்து புறப்பட்டு போனவனின் அன்பு இது வாகும். அவன் நான்கு முகமாக சப்த பிரம்மம், சோதி பிரம்மம், நாத பிரம்மம், அமுத பிரம்மம், என்ற வகையாகி பரிணமித்து சூரியனாக சுடர்விடும் சோதியாய் நிற்கும்.

சத்தியன் கருத்து :- சப்த பிரம்மம் சப்தம் என்பது உயிரினங்களிலிருந்து எழும் ஒலி அதுதான் சப்தஸ்வரங்கள் ஸ - மயில் ! ரி - மாடு ; க - ஆடு ; ம - கொக்கு ; ப - குயில் ; த - குதிரை நி - யானை இவற்றின் சப்தங்களிலிருந்து எழும் ஒலிகள் என நாரதீயசிக்ஷா என்ற நூல் கூறும்.





படம் குவிவுவில்லை (Convex Lens)

சோதி பிரம்மம் :- குவிவுவில்லைபோல வரும் சமாந்தரக் கற்றைகளை அடுத்த பக்கத்தில் ஒரு புள்ளியில் குவிக்கும். ஒளியை ஒரு புள்ளியை நோக்கி ஒடுங்கச் செய்தல். It is a convergent beam towards the focal length, படம் (1) அதே போன்று குழிவுவில்லை Cancave lens) யில் சமாந்தரைக் கற்றைகள் ஒரு புள்ளியிலிருந்து வருவதுபோலத் தோற்றும் படம் (2) அதைத் திரையில் வீழ்த்த முடியாது அது மாயை. ஒளியை ஒரு புள்ளியில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யார் குவிக்கவும் அப்புள்ளியில் இருந்து விரிக்கவும் செய்கிறார்களோ அவர்கள் ஒளியின் வேகத்தில் இயங்க முடியும். அதற்குப் பூர்வ புண்ணிய பலனும் வேண்டும் அன்று 'Einstein' சொன்னது யாராவது ஒளியின் வேகத்தில் பிரயாணம் செய்வார்கள் என்பதைக் கருதிதான் கூறியிருக்கிறார். மனோவேகம் அதைவிட ஒளியின் வேகத்தை விட அதிகம் என்பது எனது கருத்து. ஒளியின் வேகத்தில் பிரயாணம் செய்யின் திணிவு அதிகரிக்கும் நீளம் குறையும்.




படம் குழிவுவில்லை (Concave Lens)

தன் கண்ணில்லையின் குவியத்தை யார் அறிகிறார்களோ அவர்கள் ஒளியின் வேகத்தில் செல்ல முடியும், அதுதான் நவாவர்ணம். அப்போது (evidence) ஒன்பது நிறங்கள் கண்ணுக்குத் தோற்றம்.

Vibgyor


ஊதா, கருநீலம், நீலம், பச்சை, மஞ்சள், வெம்மஞசள், சிவப்பு இதைவிட புற ஊதாக்கதிர் (Ultra Vilet) அகச்சிவப்புக் கதிர்கள் Infraned) இரண்டும் சேர்த்துத் தெரியும்.

3. நாத பிரம்மம் :- தசநாதங்கள் காதில் கேட்கும் நாதமென்பது தானாக எழும் ஒலி அலைகள், "Sthira Veena" was tuned is such a way that the wind, as it

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

paned through the strings, proucced the note to Accompany the chorius. it is non-movable. அதுதான் ஆத்மாவின் கீதம்

(4) அமுத பிரம்மம் :- அமுத கலசம் அதுதான் கும்பகோணம். அங்குதான் அமுத கலசம் வைக்கப்பட்டதாம். அதுதான் கோவிலுக்கு தேங்காய் கொண்டு போவதன் நோக்கம்.




தேங்காய் (Coconut)
அமுதகலசம்-கும்பகோணம் (Kumbakonam)
பூரான் உப்பி பஞ்சு போன்றிருக்கும்

அமுதத்திற்கு உதாரணம் தேங்காய் எல்லாம் பூவுலகிலேயே உண்டு கலியுகத்தில் எல்லாம் இங்கே கிடைக்கும்.

தானாய் அமைந்த அம் முப்புரந் தன்னிடை
தானான மூவுரு வோருத்த தன்மை யார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தானான பொன்செம்மை வெண்ணிறத்தாள்
தானான போகமும் முத்தியும் நல்குமே
(திருமந்திரம் - 1047)

உடம்புள் இயங்கும் ஆத்மா தானாய் அகாரம், உகாரம் மகாரமாகிய முப்புரங்களில் மூவெழுத்துக்களில் அமைந்து மூவுருவங்களான அங்கி, திங்கள், ஞாயிறு வாய் நிற்கும் தன்மையுள்ளவனும், ஐந்தெழுத்தில் ஓடும் ஆத்மாவாய் தானென நின்று சித்தாகாசத்தில் பொன், செம்மை, வெண்மை நிறங்களாகப் பரிணமித்து தம் பரமாக்கும் போகமும் முத்தியும் அளித்திடும்.

தானே எழுந்த இத் தத்துவ நாயகி
வானோர் எழுந்து மதியை விளக்கினள்
தேனோர் எழுகின்ற தீபத் தொளியுடன்
மானே நடமுடை மன்று அறியீரே
(திருமந்திரம் - 1132)

தானே அகார எழுத்திலிருந்து எழுந்த மெய்ப் பொருளென இக்குண்டலினி சக்தி வானுலகத்திற்கு நேரே எழுந்து அங்கு பரிணமித்த சந்திரனை மேலும் பிரகபசிக்கச் செய்தாள். ஒளி விளக்குடன் தேனூறல் நல்கும். இடத்திற்கு எழுந்து சித்தாகாசத்தில் நடமாடு வதை அறியலாம்.

சிந்தையினுள்ளே திரியும் சிவசக்தி
விந்துவும் நாதமானியே விரிந்தனள்
சந்திர பூமி சடாதரி சாத்தவி
அந்தமொடு ஆகியதாம் வண்ணத்தாளே
(திருமந்திரம் - 1138)

மனத்துள்ளே நடமாடும் ஆத்ம சக்தி விந்துவும் நாத மும் ஆக இயங்கும் ஆத்ம சக்கரத்தினுள் உள்ள அவளே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்திரன், பூமி, சடையுடன் உள்ளவன், சாத்தவி-அரக்கியாயும் உள்ளவள் ஆதி அந்தமாயும் நிற்பவள் ஆவாள்.

ஆறி இருந்த அமுத பயோதரி
மாறி இருந்த வழி அறிவாரில்லை
தேறி இருந்து நற் தீபத் தொளியுடன்
ஊறி இருந்தனள் உள் உடையார்க்கே

(திருமந்திரம் - 1139)

யோகிகளுக்கு அமுதத்தை அளிக்கும் அகார உகாரத்தில் இயங்கும் சத்திமுன் ஒருகாலம் விண்ணுலகத்தில் ஆறி இருந்தவள். அவள் உடம்பினுள் புகுந்து வழிதவறி மாறி இருப்பதை மனிதர் அறியார்கள். அவளை உடம்புள்ளே சரியான முறைப்படி வைத்திருப்பவர்களுக்கு அவள் தேறி இருந்து நல்ல ஒளிவிளக்கோடு ஊறி இருப்பாள்.

சத்தியன் கருத்து :- அவள் இருந்த இடத்தில் தான் இருப்பதைப்போல் இருப்பாள். ஆனால் இருக்க மாட்டாள். அதுதான் இறைவன தன்மை. அவ்ள் வநவதைப் போல் வருவாள் ஆனால் வரமாட்டாள். அதுபோலப் போவதைப் போல் போவாள். ஆனால் போக மாட்டாள்.

தானே கழநித் தணியவும் வல்லனாய்
தானே நினைத்ததை சொல்லவும் வல்லனாய்
தானே தன் நடங்கண்டவள் தன்னையும்
தானே வணங்கித் தலைவனுமாமே.

(திருமந்திரம் -1341)

தனக்குள் இயங்கும் ஆத்மாவே விரியவும் ஒடுங்கவும் வல்லளாய் தானே யாருடைய மனத்தில் நினைத்ததை சொல்லும் வல்லவளாகவும், தானே தனது நடத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களைக் கண்டும் தனது பிரதியான சக்தியை வணங்கிய தலைவனாகவும் நிற்பாள்

தானே வெளியென எங்கும் நிறைந்தவள்
தானே _ரமவெளியது வானவள்
தானே சகலமு மாகி அழித்தவள்
தானே அனைத்துள அண்ட சகலமுமே.

(திருமந்திரம் 1361)

ஐந்தெழுத்துச் சக்கரத்தில் தானென நிற்கும், அகாரத்திலிருந்து எழும் உகாரம், அதுதான் நாத வெளியாய் எங்கும் நிறைந்தவள் அவளே பரம வெளியாகியும் அசைவான, அசைவற்ற பொருட்களையும் படைத்து காத்து அழித்தவள். அவளே பிரபஞ்சமாயும் இருப்பவள். அவளே ஆதிபராசக்தியின் தோற்றம்.

நானென்றுந் தானென்றுந் நாடி நான் சாரவே
தானென்று நானென்று இரண்டிலாத் தற்பத்
தானென்று நானென்று தத்துவம் நல்கலாம்ற்
தானென்றும் நானென்றும் சாற்றுகிலேனே.

(திருமந்திரம்-1441)

உடம்பை நாரினன்றும் உயிரைத் தானென்றும் நாடி இரண்டிலும் சேர்ந்தும் அப்படி இரண்டுமில்லாத தன்மையாயும் மெய்ப்பொருளான தத்துவமாக விளக்கி உணரச் செய்கின்ற தன்மையாயும் இருப்பதனால் அப்பொருள் இரு பொருள் என்று கூறவும் மாட்டேன்.

பூவினிற் கந்தம் பொருந்தியவாறுபோல்
சிவனுக்குள்ளே சிவமணம் பூத்தது
ஓவியம்போல் உணர்ந்து அறிவாளர்க்கு
நாவி அணைந்த நடுதறியாமே.

(திருமந்திரம்-1459)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூவினிலே நறுமணம் பொருந்திருக்கும்போது பூவைப் பார்க்கலாம். மணத்தைப் பார்க்க முடியாது. ஆனால் நுகரலாம். அதுபோல ஆத்மாவுக்குள்ளே சிவமணம் பூத்தது. ஆத்மாவின் உள் ஓவியத்தை ஓட்டத்தைக் கீறுவது என்பது அதை உணர்ந்து அறிபவர்களுக்கு, நடுத் தறிபோல் அனுபவம் கிட்டும்.

சத்தியன் கருத்து ;- ஆடை செய்யும்போது நெசவு நூல் நடுத்தறியில் கையில் அடிக்கும்போது எப்படி இயங்குமோ அப்படி நடுத்தறிபோல் இரு நூலைச் சேர்த்து இணைத்து சேலையாக்கி தருகிறதோ அப்படி இரண்டறக் கலத்தல் வேண்டும். அப்போதுதான் உண்மையான அறிவானது கிடைக்கும்.

தெளிவு அறியாதார் சிவனே அறியார்
தெளிவு அறியாதார் சீவனு மாகார்
தெளிவு அறியாதவர் சிவமாகமாட்டார்
தெளிவு அறியாதவர் தீரார் பிறப்பே.

(திருமந்திரம் - 1460)

தெளிவுடன் ஆத்மாவை அறியாதவர் உண்மைப் பொருளை அறிய மாட்டார். அவர்கள் சிவன்களாகக் கணிக்கப்படமாட்டார். தெளிவு பெறாதவர் சிவமாகவும் மாட்டார் அவர்கள் பிறப்பையும் அறுக்க மாட்டார்கள்.

விரும்பி நின்றறேசெய்யில் மெய்த்தவராகும்
விரும்பி நின்றேசெய்யின் மெய்உரையாகும்
விரும்பி நின்றேசெய்யின் மெய்த்தவமாகும்
விரும்பி நின்றேசெய்யில் இறைஅவனாமே.

(திருமந்திரம் - 1462)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆர்வத்தோடு மெய்ப் பொருளை உணரும் நெறியைப் பின்பற்றினால் அவர்களே மெய்த்தவம் செய்பவராவார். அவர்கள் செபிக்கும் பஞ்சாட்சரமே அதன் உரையாகும், அதுவே பிராணாயாமம் ஆகும் அப்படிச் செய்பவரே இறைவனாக இருப்பான் என்பது விளக்கம்

சன்மார்க்க சாதனம்தான் ஞானஞேயமாம்
பின்மார்க்க சாதனம் பேதையர்களாய் நிற்கும்
துன்மார்க்கம் விட்டதுரிய த் துரிவு அற்றார்
சன்மார்க்கம் தான் அவனாகும் சன்மார்க்கமே.

(திருமந்திரம் - 1483)

தன்னை அறியும் அறிவே சத் மார்க்கமான மெய்ப் பொருளை உணரும் வழியாகும். தன்னை அறியாத பின் மார்க்கம் மூடர்களுக்காய் நிற்கும் தூய்மையற்ற மார்க்கம் கைவிட்டு, சாக்கிரம் சொப்பனம், சுழுத்தி துரியம், தூரியாதீதம், என்பவற்றுள் துரிய நிலையை அடைவோர் சன்மார்ககத்தினர் ஆவார். தானை நிற்கும் ஆத்மா அவனாகிய இறைவனாய் மாறுவதுவே சன்மார்க்கமாகும்.

இருட்டு அறை மூலை இருந்தகுமரி
குருட்டுக் கிழவனைக் கூடக் குறித்து
குருட்டினை நீக்கி குணம் பல காட்டி
மருட்டி அவனை மணம் புரிந்தாளே.

(திருமந்திரம் - 1514)

இருட்டான நெஞ்சகத்துள்ளே இருந்த கன்னிப் பெண்ணாகிய ஆத்மாவின் சக்தி பேதமாகிய நாதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதிப் பிரானாகி உரையற்ற, செயலற்ற, பார்வையற்ற சிவனாய் நிற்கும் விந்துவை புணர்வதற்குத் தவம் செய்து இருட்டினை நீக்கிதான் அவனிலிருந்து எழுந்த சக்தி என்று குணங்கள் பலவற்றைக் காட்டி மருட்டி அவனை அடைந்து இருந்தாள்.

இருவினை நேர்ஒப்பில் இன்னருட்சத்தி
குருவென வந்து குணமபல நீக்கித்
தருமெனு ஞானத்தாற் தன் செயல் அற்றால்
திரிமலந் தீர்ந்து சிவன் சிவனாமே.

(திருமந்திரம்-1527

பாரும் உகாரம் பரத்திட்ட நாயகி நல்வினை, தீவினை இரண்டையும் நேராக ஒப்பிடுகையில் குருவாகி வந்து ஆத்ம தண்டாகிய அகார உகாரத்தில் இயங்கி, மெய்ப் பொருளை உணர விடாமல் தடுக்கும் குணங்களை நீக்கி செயலற்ற சமாதி நிலையில் இருந்தால் அவனைப் பிடித்த மூன்று மலங்களை ஆணவம் கன்மம் மாயை மூன்றும் அகன்று ஆத்மா சிவமாகி விடும்.

சத்தியன் கருத்து :- திருவருட் பயனும் உமாபதி சிவம் கூறியது நோக்கற்பாலது.

'திரிமலத்தார் ஒன்றதனிற் சென்றார்கள் அன்றி
ஒரு மலத்தராயும் உளர்.'
ஆயத்துள் நின்ற அறுசமயங்களும்
காயத்துள் நின்ற கடவுளைக் காண்கிலார்
மாயைக் குழியில் விழவர் மனை மக்கள்
பாசத்திலுற்றுப் பதைக்கின்றவாறே.

(திருமந்திரம்-1530)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலக மக்கள் கடைப் பிடிக்கும் ஆறுவகை சமயங்களும் உடம்பினுள்ளே ஆத்ம சொரூபமாய் இருக்கும் இறைவனை அறியாது மாயை வாழ்வில் சிக்குண்டு ஆசா பாசங்களால் துன்புறுவார்கள்.

அறிவுடன் கூடி அழைத்ததோர் தோணி
பறியுடன் பாரம் பழம்பதி சிந்தும்
குறியது கண்டும் கொடுவினையாளர்
செறிய நினைக்கிலர் சேவடிதானே

(திருமந்திரம் - 1554)

சத்தியன் கருத்து : அறிவுச் சரக்கை ஏற்றிய அகாரத்திற்கும் உகாரத்திற்கும் இடையில் தோணிபோல் பிராணவாயுவானது ஆத்ம தண்டில் ஓடி ஆத்மாவையும் தன் தோணியில் ஏறும்படி அழைக்கின்றது. அறிவுச் சரக்கில் பாரம் அதிகமானதால் (ஆத்மாவைப் பற்றிய சிந்தனை அற்றதால் பறிபாரம் ஆகியது) பழமையான அறிவை வேறு வழியில் சிந்த செலவிட அதனால் கொடும் பாவ வினைகள் சேர (அதனாலும் பறியில் பாரம் கூடும்) சேருமிடத்தை அறிய முடியாது, சிற பாதத்தை நினையாது இருப்பதைப் போன்றது.

திருநேரிசை :

மனமெனும் தோணி பற்றி
மதியெனும் கோலை யூன்றி
சினமெனும் சரக்கை ஏற்றி
நெறிகடல் ஓடும்போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதனெனும் பாறை தாக்கி
பறியும்போது அறியவொண்ணா
துணையுணும் உணர்வை நல்காய்
ஒற்றியூருடைய கோவே.

என்னும் திருநாவுக்கரசர் தேவராம் ஒப்பு நோக்குக.

சிவனவன் வைத்ததோர் தெய்வ நெறியிற்
பவன் அவன் வைத்த பழிவழி நாடி
சிவன் அவன் என்பது அறியவல்லார்கட்கு
அவன்அவன் அங்குள தாங்கடனாமே

(திருமந்திரம் - 1560)

அத்தன் அமைத்த உடல் இரு கூறினில் அவன் அமைத்த அறநெறியில் அவன் வைத்த ஆதி வழிநாடி நின்று சிவனாகிய ஆத்மாவே அவனாகிய இறைவன் என்று உணர வல்லார்க்கு அவனவன் தேடுமிடத்தில் இறைவனைக் கண்டு கொள்ளலாம்.

சிவனே சிவஞானி ஆதலாற் சுத்த
சிவனேயென அடிசேர வல்லார்க்கு
நவமான தத்துவம் நன்முத்தி நண்ணும்
பவமான தின்றிப் பரலோகமாமே.

(திருமந்திரம் - 1580)

சீவனும் சிவனும் வேறில்லை. சிவனை உணர்ந்தவனே சிவஞானி அவன் தானே சிவனென கருவில்மிதிதத் கலைப் பாதத்தை ஐந்தெழுத்தில் முதலெழுத்தான அகாரத்தில் சேர்ந்து சமாதி நிலை அடைய வல்லார்க்கு புதுமையான தத்துவங்களை விளக்கி இறைவனை அடையச் செய்வன். அந்த இடமே மாயையல்லாத பரலோகம் ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரிக்கின்ற பல்லுயிர்க் கெல்லாம் தலைவன்
இருக்கின்ற தன்மையை ஏதும் உணரார்
பிரிக்கின்ற விந்து பிணக்கறுத்தெல்லாம்
கருக்கொண்ட ஈசனைக் கண்டுகொண்டேன்.

(திருமந்திரம் - 1589)

உலகத்தின் எல்லா உயிர்கட்குத் தலைவனும் ஆய் நிற்கின்ற வித்துவின் தன்மையை உலக மக்கள் அறியார்கள் ஆதியிலிருந் தவிந்து சிறு சிறு பொறிகளாய்ப் பிரிந்து கேற்பித்தல் உயிராய்க் கருக்கொண்ட ஈசனைக் கண்டுணர்ந்து பின் எல்லாப் பிணக்குகளும் அற்றுப் போயினவாம்.

தான்அவனாகிச் சொருபத்து வந்திட்டு
வான்சொரூபங்கள் நான்கு மகற்றின
ஏனைய முத்திரை ஈந்தாண்ட நன்நந்தி
தான் அடி முற்சூட்டித் தாபித்தது உண்மையே

(திருமந்திரம்-1592)

தனக்குள் தானே இயங்கும் ஆத்மா இறைவனின் ஆத்மசொருபமெனப்படும் ஆத்மாவினுள் புகுந்து சப்த, நாத, சோதி அமுதம் ஆகிய பிரம்மம் நான்கையும் அகற்றி மற்றைய பிரதிபலிப்புகளையெல்லாம் அளித்த என் சற்குரு நந்தி தனது குரு பாதத்தைச் சூட்டி மெய்ப் பொருளை உணர்த்தும் :-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாரினன்று அவனென்று இரண்டாகும் தத்துவம்
தானென்ற அவனென்ற இரண்டுதனிற்கண்டு
தானென்ற பூவை அவன் அடிசாத்தினால்
தானென்று அவனென்று வேறில்லைத்தானே

(திருமந்திரம்-1607)

சத்தியன் கருத்து :-

தானாகிய ஆத்மாவும் தானும் இரண்டாக நிற்கும் தத்துவமானது தானாக நிற்கும்போது அவனாக நிற்கும் போதும் அதனுள் இருந்தும் தானென்ற மலரை அவன் பாதகமலங்களில் வைத்து வணங்கினால்தான் அவன் இரண்டும் நன்றாகித் தானவன் என்பது போலாக இரண் றக் கலந்ததாகும்.
திருவருட் பயனும்.

தாடலைபோல் கூடியவை தானிகழாக்
கூடலை நீ ஏகமெனக்கொள்.

என்பது கூறுகிறது.

உணர்ந்தேன் உலகினில் ஒன்பொருளனை
உணர்ந்தேன் வெலயம் கோயில் என்நெஞ்சம்
புணர்ந்தேன் புனிதனும் பொய்யல்ல மெய்யே
பணிந்தேன் பகலவன் பாட்டும் ஒலியே

(திருமந்திரம்-1748)

இந்த உலகில் ஒரு பொருளாய் பலபல தோற்றங் களாய் உருவெடுத்து நிற்பவனை அறிந்துணரவும், பிர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஞ்ச முழுவதையும் கோவிலாக்கி என் நெஞ்சினுள்ளும் நிற்பதை உணர்ந்தேன். அந்தப் பொருளை தூய்மையான அகார எழுத்துடன் மனத்தைப் பதித்து, சமாதி நிலையை அடைந்தேன். எப்போதும் பகல் போல ஒளி மயமான விந்து அகாரத்தில் நின்று ஒலிக்கும் நாதத்தை சக்தியைப் பணிந்து உண்மையை உணர்ந்தேன்.

தன்மேனி தற் சிவலிங்கமாய் நின்றிடும்
தன்மேனி தானுந் சதாசிவமாய் நிற்கும்
தன்மேனி தற்சிவன் தற்சிவானந்தமாம்
தன்மேனி தானாகுந் தற்பரன் தானே.

(திருமந்திரம்-1750)

தன்னுள் இயங்கும் ஆத்ம வஸ்துவின் ஒளிமயமான மேனி அகார உகாரத்தில் அடங்கி அதை உணர்ந்து அதுவே சிவலிங்கமாகவும் சதா சிவலிங்கமாகவும் நிற்கிறது அதுவே தனதுசிவன் தனக்கு அது சிவானந்தத்தை அளிக்கும் பொருள். தன்மேனியே தானிறைத்தானாகும் தற்சிவலிங்கமாகும்.

தானேர் எழுகின்ற சோதியைக் காணலாம்
வானோர் எழுகின்ற ஐம்பதம் அமர்ந்திடம்
பூனேர் எழுகின்ற பொற்கொடி தன்னுடன்
தானேர் எழுகின்ற அகாரமதாமே

(திருமந்திரம் - 1756)

தனக்கு நேரே எழுகின்ற ஆத்மசோதியை மனிதர் விரும்பினால் காணலாம். அது ஐந்தெழுத்து ஆத்ம

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சக்கரத்தினால் அமர்ந்திருந்து எமனுக்கு நேராகா சித்தா காசத்திற்கு எழும் கருவில் மிதித்த கமலப்பாதத்திலிருந்து ஒளிமயமான கொடிபோல் தாமரைப்பூவுக்கு நேராகச் சிக்கி எழும். அந்தப் பொருள் ஐந்தெழுத்தின் முதல் எழுத்தான அகார எழுத்தாகும்.

சத்தியன் கருத்து :

அட்டைப் படம் இதனையே குறிக்கின்றது.

சத்திக்குமேலே பராசந்தி தன்உள்ளே
அந்தச் சிவபதம் தோயாத தூவெளி
அத்தன் திருவடிக்கு அப்பாலைக்கு அப்பாலம்
ஏத்த உமா ஈசன் தாளான உண்மையே.

(திருமந்திரம் - 1768)

கருவில் மிதித்த பாதத்திற்கு அப்பாலுக்கு அப்பால் சக்தியும் சிவனுமாய் ஒழுங்கு சேர்ந்து நிற்பதே தான் என நிற்கும் பராசிவ வெளியில் கலந்து நிற்கும் ஈசன் என்றும் மெய்ப்பொருளாகிய ஆத்மாவாகும்.

அவனும் அவனும் அவளை அறியார்
அவனை அறியில் அறிவானும் இல்லை
அவனும் அவனும் அவளை அறியில்
அவனும் அவனும் அவன் இவனாமே

(திருமந்திரம் - 1789)

ஒரே பொருளே அறிவாய் அறிபவனாய் வேறுபட்டுத் தோன்றும் மாயை. அப்பொருளை அறிந்து விட்டால்' மாயை நீங்கி விட்டால் அறிபவன் இல்லை. அப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளே இறைவனாய் விடும் ஆத்மா. தானின்றித் தானாகத் தத்துவ அத்தமே யென்று கூறுகிறது திரு மந்திரம்.

தானே அறியும் வினைகள் அழிந்தபின்
தானே அறிகிலன் நந்தி அறியுங்கொல்
உள்ளே உருசி உணர்வை உணர்ந்தபின்
தேனே யனைய னந்தேவர் பிரானே

(திருமந்திரம் - 1796)

ஐந்தெழுத்தின் முதலெழுத்தான அகாரம் செயலற்று உகாரத்திற்குச் செல்லும் வினை அழிந்தால் ஆத்மா வாகிய தானே தன்னை அறியும். நான் அறிய இயலாது நந்தியென அழைக்கப்படும் ஆன்மா அறியும். உடல் உள்ளம் உருகி ஆத்மாவின் உணர்வை அறிந்துணர்ந்தபின் ஆத்மாவே தேனையொத்த தேவர் பிரானாகிய இறை ஆகும்.

நான் அறிந்த அன்றே இருக்கின்ற ஈசனை
ஊன் அறிந்தார் அறியாது மயங்கினர்
ஊன் அறிந்துள்ளே உயிர்க்கின்ற ஒண்சுடர்
தான் அறியான் பின்னை யார் அறிவாரே

(திருமந்திரம் - 797)

நான் குருவிடமிருந்து ஆத்ம ஞானம் பெற்ற அன்றே ஒளிமயமான ஈசனை அறிந்தேன். உடம்பு உணர்ச்சியில் காலம் போக்குபவர் இறைவனை அறியாது மயக்கத்தில் வாழ்வர். உடம்பை அறிந்து அதனுள்ளே உயிராய் நிற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்ற ஒருசுடரை தான் அறியாமல் வேறு யாரை மனிதன் அறிகின்றான்.

சத்தியன் கருத்து :

சுடரை அறிவதும் இறைவனை அறிய ஒரு வழி நான் போனால் போவேன் என்பதும் ஒரு கருத்து.

தானே படைத்திடும் தானே அளித்திடும்
தானே துடைத்திடும் தானே மறைத்திடும்
தானே இவை செய்து தான் முத்தி தந்திடும்
தானே வியாபித் தலைவனுமாமே.

(திருமந்திரம் - 1809)

தானென நிற்கும் ஐந்தெழுத்தில் இடங்கும் ஆத்மாவே படைத்து அளித்துக் காத்து அழித்து மறைத்து நிற்கும் பொருள் அவனே இவை செய்து முத்தி அளிப்பவன். அவனே பிரபஞ்சத்தில் அளவளாவி வியாபித்து நிற்கும் இறைவன்.

ஒன்றதுவாலே உவப்பிலி தானாகி
நின்றதுதான்போல் உயிர்க்குயிராய் நிலை
தன்றி அவையல்ல வாகும் துணையென்ன
நிறைந்துதான் விளையாட்டு என்னுள் தேயமே.

(திருமந்திரம்-1811)

ஒரு பொருளை அகார எழுத்தாலே எங்கும் பரவி தனக்குள் இயங்கும் ஆத்மாவாகித்'தான்'போல நின்றது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிர்நிலை. அது மற்றப் பொருள்கள்மேல் அழியாத தொன்று. அது உடம்புள் துணையாய் விளையாட்டாய் அன்போடு நின்கின்றது.

சத்தியன் கருத்து:-

திருத்தக்கதேவித் திருவிசைப்பாவும் இதையே கூறுகிறது.

ஒளிவளர் விளக்கே உவப்பிலா வொன்றே
உணர்வு சூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள் மணிக்குன்றே
என்சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத்துள் ஆனந்தக்கனியே
அம்பலம் ஆடரங்ககாக
வெளிவளர் தெய்வக் கூத்துகந்தாயைத்
தொண்டனேன் விளம்புமாவிளம்பே.

இத் திருவளர் பளிங்கின் திரள்மணிக்குன்று என்று சோதி ரூபத்தைக் கூறி நிற்கின்றது.

வித்திலன்றி முளையில்லை அம்முளை
வித்திலன்றி வெளிப்படுமாறில்லை
வித்தும் முளையும் உடலில் வேறில்லை
அத்தன்மை ஆகுமே அரன்நெறிகளனுமே

(திருமந்திரம்-1932)

வித்தும் வித்திலிருந்து எழுகின்ற முளையும் ஒன்று மல்ல வேறுமல்ல. முளை வித்தில்லாமல் வெளிப்பட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாட்டாது. இறைவனுக்கும் ஆத்மாவுக்குமுள்ள இத் தன்மையை இது விளக்கும்.

சத்தியன் கருத்து ;-

முட்டையிலிருந்து கோழியா? கோழியிலிருந்து முட்டையா? என்னும் கேள்விக்கு இப்பாடல் நல்ல விளக்கம் அளிக்கின்றது.

தானே உபதேசம் தான் அல்லாது ஒன்றில்லை
ஆனே உயிர் விந்து வந்த பதி நான்கும்
ஆனோர் அடங்க அதன் பின்பு புத்தியும்
தானே சிவகதி தன்மையுமாமே.

(திருமந்திரம்-1968)

தாரிணை நிற்கும் ஐந்தெழுத்தில் இயங்கும் ஆத்மாவே போதகன். அது அல்லாது வேறு ஒன்று இல்லை.

விந்துலிலிருந்தே பிரபஞ்சம் தோன்றினதால் உயர் விந்துவெனக் கூறப்பட்டுள்ளது. விந்துவிலிருந்து வந்த 12 கலைகளும் அடங்கி அதன் பின் புத்தியும் அடங்க தானே சிவமாய் நிற்கும்.

சத்தியன் கருத்து ;-

24மனித நிற முர்த்தங்களின் (Chromosome) ஒடுக்கற்பிரிவின்போது (Mitosis) அரைவாசியாக ஒடுங்கும். அப்போது 12 கலைகள் உண்டாகும். எளவும் (Micro-cosome) கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விந்துவும் நாதமும் விளைய விளைந்தது
வந்த இப்பல்லுயிர் மன்னுயிருக்கெலாம்
அந்தமும் ஆதியும் மாமந்திரங்களும்
விந்து அடங்க விளையும் சிவோகமே.

(திருமந்திரம்-1969)

விந்துவும் நாதமும் இணைந்து செயல்பட்டதால் உண்டான எல்லா உயிர்களும் அவையின் அந்தமும் ஆதியும் அவை உடம்புள் நின்று உரைக்கும் பெரும் மந்திரங்களும் விந்துவிலிருந்து எழுந்த நாதம் அடங்கினால் சிவயோகம் உண்டாகி சமாதி நிலையடையும், ஆதியில் இருந்த பொருள் விந்து, நாதத்துடன் இணைந்து சக்கரமாய் நிற்பதுதான் ஆத்ம சொரூபம். அச்சக்கரத்தை ஐந்தெழுத்தாம் பஞ்சாட்சரமாய் நந்தியின் சீடர்களை திருமூலரும், பதஞ்சலியும் பிரித்து கூறியுள்ளார்கள். விந்துவே எழுத்தின் முதலான அகார எழுத்து.

சத்தமும் சத்தமனமும் மனக்கருத்தும்
ஏத்தறிகின்ற இடமும் அறிகிலர்
மெய்த்து அறிகின்ற இடம் அறிவார்க்கு
அத்தன் இருப்பிடம் அவ்இடந்தானே.

(திருமந்திரம்-1973)

உடம்புள் ஒலிக்கும் ஐந்தெழுந்தாலான ஆத்மாவின் சத்தமும் அச்சத்தை வாங்கி நிற்கும் மனமும், மனக்குறிக்கோளும் ஒத்து உணர்கின்ற இடமும் மனிதர்கள் அறியாததனால்தான் இன்பதுன்பங்கள். அறிந்தால் உயிர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெய்த்து எழுகின்ற இடமாகிய ஐந்தெழுத்தின் முதலே மூத்தான அகார எழுத்தை அறிய வல்லவர்கள் அவர் கட்கு இறைவன் இருப்பிடத்தை அறியலாம்.

செஞ்சுடரோக் முதலாகிய தேவர்கள்
மஞ்சுடை மேருவலம் வரும் காரணம்
என் சுடர் ஈசன் இறைவன் இணையடி
தன் சுடராக வணங்குந் தவமே

(திருமந்திரம்-1975)

செம்மஞ்சள் நிறமான சிவந்த ஒளியுடையவனை தேவர்கள் கயிலை மலையை வலம் வரும் காரணத்தினால் ஆத்மசோதியே இறைவனின் இணைந்து நிற்கும் பாத மாகும். அதுவே தவத்தில் தன் ஒளி யென்பது விளங்கும்

தானே உலகுக்குந் தத்துவமாய் நிற்கும்
தானே உலகுக்குத் தையிலுமாய் நிற்கும்
தானே உலகுக்குச் சம்புவமாய் நிற்கும்
தானே உலகுக்குத் தன் சுடராமே.

(திருமந்திரம் - 1778)

தானே நிற்கும் ஆத்ம வஸ்துவே உலகில் மெய்ப் பொருளாய் நிற்கும். அதுவே உலகத்தையும் சராசரங் களையும் படைத்து ஈன்ற பெண்ணாக நிற்கும். தானே உலகில் தானாக எல்லா வஸ்த்துக்களையும் படைத்து காத்து அழிக்கும் பொருளாய் நிற்கும் தானே உலகுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குளிர்ச்சியால் அடராய் உயிராய் எல்லாப் பிராணிகளுள் ளும் நிற்கின்றது.

ஆதித்தன் ஓடி அடங்கும் குடங்கண்டு
சாதிக்க வல்லார் தம்மை உணர்ந்தவர்
பேதித்து உலகம் பிதற்றும் பிதற்றெல்லாம்
ஆதித்தனோடே அடங்குகின்றாரே.

(திருமந்திரம்-1986)

வானுலகை விண்ணுலக வெளியே ஞான சூரியன் ஓடிக் கொண்டிருப்பை தியான யோகிகள் தவம் செய்யும்போது காண்பார்கள். அது ஓடி அடங்கும் இடத்தைக் கண்டவர் (மனத்தை சோதியிலே ஒரு நிலைப் படுத்தியவர் சத்தியன் கருத்து) தமக்குள் இயங்கும் ஆத்மாவை அறிந்தவரா வார். உலக மக்கள் அறிய வேண்டிய அறிவை அறியா மல் பேதித்து பிதற்றுவதெல்லாம் இறுதியில் ஆதித்தனு டன் அடங்க வேண்டியவர்களாவர்.

சந்திரன் சூரியன் தான் வரிற் பூசனை
முந்திய பானுவில் இந்து வந்தேய் முறை
அந்த இரண்டும் உபயநிலைத்திற்
சிந்தை தெளிந்தார் சிவமாயினாரே.

(திருமந்திரம்-1989)

சித்தாகாசத்தில் ஆத்மசுடர் அடங்கி வானுலகத்தில் சந்திரனாகவும் விண்ணுலகில் சூரியனாகவும் பிரதிபலித் ததால் அதுவே பூசனை. சந்திரன் சூரியனில் இணைந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் தேய்ந்து அழிந்து போகும். இந்த இரண்டையும் தங்கள் (இதய மலையில் கண்டு உள்ளம் தெளிந்தார் சிவமாவார்கள் சத்தியன் கருத்து) உபயநிலமான கயிலை மலையில் கண்டுள்ளம் தெளிந்தவர் சிவமாவர்.

நேர் அறிவாக திரும்பிய பேரொளி
போர் அறியாது புவனங்கள் போய்வரும்
தேர் அறியாத திசை ஒளியாயிடும்
ஆர் அறிவார் இது நாயகமாமே.

(திருமந்திரம்-1998)

பூவில் இருந்திடும் புண்ணியத் தண்டான அகார உகார வடிவம் சேரணர்த நேர் அறிவுப் பொருள். அதுவே பேரொளியான பரஞ்சோதி. அதற்கு எதிர்ப்பு ஒன்றுமிலாது அண்டசராசரமேங்கும் சுற்றிவரும். அது எத்திசையும் ஒளிரூபமாய் நிற்கும். பிரபஞ்சத்திற்கு நாதனாக தலைவனாக நிற்பவனை யார்தான் அறிவார்கள் அவனை அறிதலும் இலகு என்பது வெள்ளிடைமலை.

தானே விரிசுடர் மூன்றும் ஒன்றாய் நிற்கும்
தானே அயன் மாலென நின்று தாயிக்கு
தானே உடல் உயிர் வேறு அன்றி நின்றுள்ளான்
தானே வெளி ஒளிதான் இருட்டாமே.

(திருமந்திரம்-2003)

தனக்குள் இயங்கும் ஆத்மாவே விரிசுடரான ஆகி, திங்கள் ஞாயிறு இம்மூன்றும் ஒன்றாய் நிற்கும். தானே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரம்மவிஷ்ணுவால் படைத்து காக்கும். அதுவே உடல் உயிர் வேறின்றி ஒரு உருவமாய் நிற்கும். அதுவே வெளியாயும் ஒளியாயும் நிற்கும்.

சத்தியன் கருத்து; அங்கி என்றால் போர்வை என்றும் ஒரு கருத்துண்டு. அங்கி என்பது ஒளிர் பொருளை இங்கே குறிக்கின்றது. "அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய்" தாயுமானவர் பால் ஒப்பு நோக்குக. நாம் காணும் சூரியன் சந்திரன் இவைகளை விட மூன்றாவது பொருள் நாம் காணும் ஒளிர் பொருள் அதுதான் ஆத்மச் சுடர். அங்கு ஒளியைத்தான் அங்கிலன்று குறிப்பிடுகிறார் திருமூலர்.

அறிகாய் அறியாமை நீங்கி அவனே
பொறிவாப் ஒழிந்து எங்கும் தானான போதம்
அறிவியல் அவற்றினுள் தானாய் அறிவன்
நெறிவாகி நின்ற அச்சிவனுமாகுமே.

(திருமந்திரம்-2013)

பொறி ஒளியானது ஐந்தெழுத்தில் இயங்கும் அப்பொருள் அறிவாய் நின்று அஞ்ஞானத்தையும் 2ம் புலன்களின் வழியையும் அடைத்து பிரபஞ்சமுழுவதும் தானே பலபல தோற்றங்களாய் நிற்கும் போதத்தை அளிப்பவன் சித்துப் பொருளான அவன் எல்லாப் பொருள்களிலும் தானே கலந்து நிற்பதை அறிவன் அதுவே எங்கும் செறிந்து நிற்கும் சிவன்.

தானேயென நின்ற சற்குரு சந்ததி
தானேயென நின்ற தன்மை வெளிப்படிற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தானே தனைப் பெறவேண்டும் சதுர்பெற
ஊனேயென நினைந்து ஓர்ந்து கொள் உன்னிலே
(திருமந்திரம்-2055)

ஐந்தெழுத்தை உபதேசித்த சற்குருவின் சந்நிதியாகிய குருபாதம் ஐந்தெழுத்தின் முதலெழுத்து. அதுவே ஆத்மாவாய் நிற்கும். தான் அத்தன்மை வெளிப்படிந்தானே தானாகிய ஆத்மாவை உணர்ந்து ஈடேற வேண்டும உடம்புக்குள்ளேயே அவன் இருப்பதை நினைந்து ஓர்ந்து உணர்ந்து அறிந்து கொள்.

காயக் குழப்பனைக் காய நன்நாடனை
காயத்தின் உள்ளே கமழ்கின்ற நந்தியை
தேயத்துளே எங்கும் தேடித்திரிவார்கள்
காயத்துள் நின்ற கருத்தறியார்களே.
(திருமந்திரம்-2071)

உடம்புக்குள்ளே நின்று எல்லா அங்கங்களையும் அசைக்கச் செய்யும் குடிப்பனை காயத்துக்குள் நடமாடுபவனை, நல்ல கந்தத்தைக் கமழ்கின்ற நந்தியென்று கூறப்படும் ஆத்மாவை உலக மக்கள் தேசமெல்லாம் இறைவனைத் தேடித் திரிந்தும் காணமாட்டார்கள் அவன் உடம்புக்குள் ஆத்மாவின் கோலமாய் நிற்கும் கருத்தை மனிதர்கள் அறியமாட்டார்கள்' அழித்தால் அவன்தான் இறைவன் சத்தியன் கருத்தை ஆயத்துக் குள்ளே ஆன்மாவாய் இருப்பவன்தான் இறைவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்று இரண்டாகி நின்று ஒன்றி ஒன்றியினோர்க்கு
ஒன்றும் இரண்டும் ஒருகாலும் கூடிடா
ஒன்று இரண்டென்றே உரை தருவோர்க்கெல்லாம்
ஒன்று இரண்டாய் நிற்கும் ஒன்றோடு ஒன்றானதே

(திருமந்திரம் - 2077)

ஐந்தெழுத்துச் சக்கரத்தில் இயங்கும் ஒருபொருளே ஆத்மாவாகவும் இறைவனாகவும் இரண்டாய் நிற்கின்றது. ஒன்றோடு ஒன்று ஒன்றி ஒன்றானவர்களுக்கு அது ஒரு பொருளாக ஒன்றோடும் கூடாமல் நிற்கும் அப்பொருளை இரண்டு பொருளாக ஆத்மா இறைவனென்று கருதுபவர்களுக்கு அந்த ஒரே ஒரு பொருள் இரண்டாக நிற்கும்.

உலகாணி ஒண்சுடர் உத்தமசித்தன்
நிலவாணி ஐந்தினுள் நேருற நிற்கும்
சிலவாணியாகிய தேவர் பிரானைத்
தலைவாணி செய்வது தன்னை அறிவதே

(திருமந்திரம் - 2080)

உலகம் முழுவதையும் படைத்துக் காத்து அழிக்கும் உலகத்திற்கு ஆணிவேர் போன்றுள்ள ஒரு ஆத்ம சுடரானது உத்தமசித்துப் பொருளாகும். அது ஐந்தெழுத்துச் சக்கரத்துள் நேராக நிற்கும் அதுவே பலபல தோற்றங்களாய் உருவங்களாய் நிற்கும் தேவர்களுக்கும் தலைவன். அத்தலைவனை வாணிபம் செய்து தனக்குள் இயங்கும் ஆத்மப்பொருளை அறிவதுதான் உலகத்திற்கு ஆணிவேராகி நின்ற ஒரு பொருள். அந்த ஆத்ம பொருளிலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலான பொருள் இல்லையென்று திருமந்திரம் கூறுகிறது.

இப்பரிசே இளஞாயிறுபோல் உரு
அப்பரிசு அங்கியின் உள்ளுறை அம்மானை
இப்பரிசே கமலத்துறை ஈசனை
மெய்ப்பரிசே வினவாது இருந்தோமே.

(திருமந்திரம் - 2092)

உடம்புள் இயங்கும் ஆத்மாதான் எமக்குக் கிடைத்த மாபெரும் பரிசு அது இளம் சூரியனைப்போல் நிதம் உள்ளது. இப்பரிசே ஆத்ம சுடருள் உறைந்து நிற்கும் அம்மான் எனப்பட்டது. அதுவே கருவில் மிதித்த கமலத்தில் உறைந்து நிற்கும் ஈசன்! இம்மேன்மையான பெரும் பரிசை இவ்வளவு காலமும் கேட்டு அறியாமல் இருந்து விட்டோமே என நினையுங்கள். நினைத்தபின் அறியத் தொடங்குங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org